பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | பங்குனி 24 | சனிக்கிழமை 07.04.2018 | கதிர் 153

### இது ரகசியம் அல்ல!

வடக்கு மாகாணசபையின் பதவிக்காலம் இன்னும் ஐந்து மாதங்களில் முடிந்து விடும். வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் அதற்குப் பிறகு என்ன செய்வார்?

சுவாரஷியமான பல ஊகங்களை இந்தக் கேள்வி தந்து நிற்கின்றது. அது பற்றிய சில தகவல்களை இன்று பரிமாறலாம் என்று பக்கம் 03 »

# அரசியல் கைதிகளின் விடுவிப்புக்கு விரைவில் அமைச்சரவைப் பத்திரம்

## மனோ கணேசன் சமர்ப்பிப்பார்

கொழும்பு, ஏப்ரல் 07

நீண்ட காலம் தடுப்புக் காவலிலும் சிறைகளிலும் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிப்பதற்கு வழி செய்யும் விதத்தில் நடவடிக்கை எடுப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை விரைவில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கவுள்ளார் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் உத்தியோக பூர்வ மொழிகள் அமைச்சர் மனோ கணேசன். பக்கம் 18 »

## ஈ.பி.டி.பியின் கோட்டையில் ஆட்சியமைத்த கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.07

ஈ.பி.டி.பியின் கோட்டை எனக் கூறப்பட்ட நெடுந்தீவுப் பிரதேச சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வசம் விழுந்தது.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தெரிவுக் பக்கம் 18 »

## 108 தேங்காய்கள் உடைத்த யாழ். பல்கலை ஊழியர்கள்



யாழ்ப்பாணம், ஏப்.07

யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்கள் 108 தேங்காய்கள் உடைத்து நேற்று நண்பகல் பக்கம் 18 »

## அரசு பலவீனமடைவதற்கு ஒருபோதும் இடமளியேன்

### ஜனாதிபதி மைத்திரிபால உறுதி
### அனைத்து எம்.பிக்களுக்கும் அழைப்பு



கொழும்பு, ஏப்ரல் 07

“நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் எத்தகைய பிரிவினையுமின்றி நாட்டை நேசிக்கும் அனைவருடைய உதவிகளும் பெற்றுக் கொள்ளப்படும். நாட்டுக்கு வகை கூறவேண்டிய ஜனாதிபதி என்ற வகையில் அரசு பலவீனமடைய ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது”.

– இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். பக்கம் 19 »

## வடக்கு தொண்டர் ஆசிரியர்களுக்கு ஏப். 19, 20 நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஏப்.07

வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 19, 20ஆம் திகதிகளில் நடைபெறும். நேர்முகத் தேர்வுக்கு வருகை தரும் போது உறுதிப்படுத்துவதற்கான கடிதம் அல்லது சத்தியக் கடதாசி கட்டாயம் எடுத்து வரவேண்டும் எனக் கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் அறிவுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு மாகாணத் பக்கம் 18 »

## சு.கவின் 6 அமைச்சர்களுக்கு எதிராக நேற்றுப் பிரேரணை!

### சபாநாயகரிடம் கையளிப்பு



கொழும்பு, ஏப்.07

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 6 அமைச்சர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை பக்கம் 18 »

## பிரேரணை வாபஸ்!

### ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.07

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 6 அமைச்சர்களுக்கு எதிராகச் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட நம்பிக்கை பக்கம் 18 »

## புலனாய்வுத் தளபதி கைதால் விசாரணையில் பெரும் திருப்பம்

### பல ‘திடுக்’ தகவல் அம்பலமாகும் சாத்தியம்

‘த நேஷன்’ பத்திரிகையின் துணை ஆசிரியராக இருந்த கீத் நொயர் 2008 மே 22 ஆம் திகதி கடத்தப்பட்டு மோசமாகத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அச்சமயம் இராணுவப் புலனாய்வுப் பிரிவுத் தலைவராகவிருந்த மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகர கைது செய்யப்பட்டுள்ளமையை அடுத்து அந்த வழக்கிலும் அது போன்ற பல தாக்குதல் பக்கம் 18 »

## ரணிலின் உறுதிமொழியை பொறுத்திருந்து பார்ப்போம்

### கூறுகிறார் வடக்கு முதல்வர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.07

கூட்டமைப்புக்குப் பிரதமர் ரணில் எழுத்து மூலம் வழங்கிய உறுதிமொழி தொடர்பில் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் என வடக்கு மாகாண பக்கம் 18 »

## காணாமற்போனோர் தொடர்பில் தமிழக சட்டசபையில் பிரேரணை

### கிளிநொச்சியில் உறவுகளிடம் கருணாஸ் உறுதி

கிளிநொச்சி, ஏப்.07

ஈழத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தமிழகச் சட்ட மன்றில் முதலமைச்சர் ஊடாகக் கவனவீர்ப்புப் பிரேரணையைக் கொண்டு வருவேன் எனத் தமிழக சட்ட மன்ற உறுப்பினரும் பக்கம் 18 »



## தமிழகத்துடன் வடக்குக்கு உயர்கல்வி ஒப்பந்தங்கள்!

### கருணாஸிடம் விக்கி வலியுறுத்தல்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.07

தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கும் வடக்கிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கும் இடையில் உயர்கல்வி சார்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென நடிகரும் தமிழக பக்கம் 18 »

காலைக்கதிர் Kalaikkathir



# படை முகாமுக்குள் இளைஞர்களை அழைத்துச் சென்றதைக் கண்டேன்

## சிறுப்பிட்டிக் கொலை வழக்கில் பெண் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஏப்.06

சிறுப்பிட்டி படைமுகாமுக்குள் இளைஞர்கள் இருவரையும் இராணுவத்தினர் அழைத்துச் சென்றனர். அதனை என் கண்களால் கண்டேன். சிறிது நேரம் அந்த இடத்தில் நின்று பார்த்தேன். எனினும் இளைஞர்கள் இருவரும் வெளியே வரவில்லை

இவ்வாறு சிறுப்பிட்டி இளைஞர்களைக் கடத்திக் கொலை செய்யப்பட்ட இராணுவத்துக்கு எதிரான வழக்கில் பெண் ஒருவர் சாட்சியமளித்தார்.

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டிப் பகுதியில் இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினரின் வழக்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாண நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் சுருக்கமுறையற்ற விசாரணைக்காக வந்தது.

இதன்போது மன்றில் சந்தேக நபர்களான 5 இராணுவத்தினரும் முன்னிலையாகினர். வழக்கின் 3ஆவது சந்தேகநபரான இராணுவச் சிப்பாய் உயிரிழந்துவிட்டார்.

வழக்குத் தொடுநர் தரப்பில் சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் முன்னிலையானார்.

வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 14 சாட்சியங்களில் 7 சிவில் சாட்சிகளிடம் இன்று மன்றினால் சாட்சியம் பெறப்பட்டது.

சாட்சியமளித்த பெண் ஒருவரே இந்த விடயங்களை மன்றிடம் கூறினார்.

இளைஞர்கள் இருவரும் சைக்கிளில் பயணித்தவேளை வழிமறித்த இராணுவத்தினர் அவர்களைச் சிறுப்பிட்டி படை முகாமுக்குள் அழைத்துச் சென்றனர்.

அதனை முகாமுக்கு அண்மையில் நின்று அவதானித்தேன். சிறிது நேரம் அங்கு என்ன நடக்கின்றது என அவதானித்தேன். எனினும் அந்த இளைஞர்கள் இருவரும் முகாமுக்குள் இருந்து வெளியே வரவில்லை என்று அந்தப் பெண் சாட்சியமளித்தார்.

நேற்று முன் தினம் 7 சாட்சியங்கள் பதியப்பட்டதுடன் மீதி சிவில் மற்றும் பொலிஸ் சாட்சியங்களை வரும் ஜூலை 15ஆம் திகதி பதியப்படும் என மன்று கட்டளையிட்டது.

**பின்னணி**

1997ஆம் ஆண்டு ஒக்ரோபர் 28 ஆம் திகதி இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். இதனுடன் தொடர்புபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்தனர்.

எனினும் 1998 ஆம் ஆண்டு நீதிவான் நீதிமன்றம் குறித்த நபர்களுக்கு பிணை வழங்கியது.

இதனைத்தொடர்ந்து கிடப்பில் போடப்பட்ட வழக்கு 2016 ஆம் ஆண்டு சட்டமா அதிபரினால் விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரில் இருவர் போரில் உயிரிழந்தனர். இந்த நிலையில், 14 இராணுவத்தினர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

எனினும் அவர்களில் 9 பேரை வழக்கிலிருந்து விடுவிக்க சட்டமா அதிபர் அறிவுறுத்தல் வழங்கினார். ஏனைய 5 சந்தேகநபர்களுக்கும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் பிணை வழங்கியது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 1997ஆம் ஆண்டே விசாரணைகளை மேற்கொண்டிருந்த இராணுவப் பொலிஸார் கொல்லப்பட்ட இளைஞர்களில் ஒருவரின் சங்கிலி மற்றும் கைக்கடிகாரம் என்பவற்றை முகாமுக்குள் இருந்து மீட்டிருந்தனர்.

அத்துடன் இளைஞர்களின் துவிச்சக்கர வண்டிகளின் பாகங்களையும் இராணுவப் பொலிஸார் மீட்டிருந்தனர். அந்தச் சான்றுப் பொருள்கள் தற்போது இந்த வழக்குடன் சேர்க்கப்பட்டுள்ளன. (ஐ)

# போதையினால் சீரழிகிறது கல்வி

## வவுனியா மாணவர்கள் ஆர்ப்பாட்டம்




வவுனியா, ஏப்.07

போதையினால் தமது கல்வி சீரழிவதாகத் தெரிவித்து வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலய மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியாவில் அண்மைக்காலமாக போதைப் பொருள்களின் பாவனை மற்றும் மதுக் கடைகளின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில், பல தரப்பாலும் இதற்கு எதிராகக் குரல் எழுப்பப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தின் மாணவர்கள், பாடசாலைச் சமூகம், பெற்றோர்கள், சிவில் பாதுகாப்பு குழுவினர், பொலிஸார், சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பு என்பன இணைந்து நேற்று பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது போதையால் கல்வியைச் சீரழிக்காதே, போதையால் பொருளாதாரம் சிதைகின்றது, போதையற்ற சமூகத்தை உருவாக்குவோம், புகைத்தலை ஒழிப்போம் புற்றுநோயைத் தடுப்போம் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் பாடசாலை அதிபர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் போதைப்பாவனை குறித்து விளக்கமளித்திருந்தனர். (ஐ-100)

# ஆவணங்கள் இருந்தும் காணிகளில் வாழமுடியாத நிலையில் உள்ளோம்

## சாந்தி எம். பி. தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஏப்.07

காணிக்கான ஆவணங்கள் இருந்தும் காணிக்குள் நாங்கள் வாழமுடியாத நிலையில் வீதி ஓரங்களில் வாழ்கிறோம் என நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கடந்தகாலப் போரின்போது சொத்துக்களை இழந்தவர்களில் ஒருதொகுதிப் பேருக்கு நேற்று இழப்பீட்டு நிதி வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2009 ஆம் ஆண்டு இதே காலப்பகுதிகளில் முள்ளிவாய்க்கால் பகுதிகளில் நாங்கள் பட்ட அல்லோல கல்லோலங்களை நினைத்து பார்க்கின்றேன். இந்த உதவி பெறுவதற்காக வந்துள்ளவர்கள் எவ்வளவு வலிகளை, சுமைகளை, இழப்புக்களைச் சுமந்து கொண்டு காத்திருக்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியும். நானும் அதை அனுபவித்தவள். இந்தச் சிறு உதவியினைப் பெறுவதற்கு அதிகாலை வேளையிலேயே பேருந்துக்குப் பணம் இல்லாமல் கூடக் கடன் பட்டு வந்திருப்பார்கள் என்பது எனக்கு தெரியும். எங்கள் இழப்புக்களுக்கு இது ஈடாகாது. நாங்கள் அனைத்து அசையும் சொத்துக்களையும் இழந்தவர்கள் மட்டுமல்ல. இன்று அசையாச் சொத்துக்களையும் கைவிட்டு தெருவோரங்களில் ஏங்கிக்கொண்டிருப்பவர்கள். காணிக்கான ஆவணங்கள் இருந்தும் காணிக்குள் நாங்கள் வாழமுடியாத நிலையில் இன்று கேப்பாபிலவில் ஓர் ஆண்டுக்கும் மேலாக மக்கள் காத்திருக்கின்றார்கள். எங்கள் வலிகள் வேதனைகளை எந்த ஒரு கொடுப்பனவும் ஈடுசெய்யாது. ஆனாலும் இந்த அமைச்சின் அதிகாரிகளிடம் சில கோரிக்கைகளை முன்வைக்கின்றேன்.

இறுதிப்போரின்போது கைவிடப்பட்ட குறிப்பாக வாகனங்களின் ஆவணங்களை மக்கள் இப்பொழுதும் வைத்துள்ளார்கள். இந்த ஆவணங்கள் உள்ள அந்தச் சொத்துக்களுக்கு ஈடாக கொடுப்பனவுகளைக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும். அதேபோன்று வங்கிக் கணக்கில் வைப்புச் செய்த பணத்திற்கான ஆவணம், அடைவு வைத்த ஆவணங்கள் இப்பொழுதும் மக்கள் வைத்திருக்கின்றார்கள். தன்னுடைய உறவை இந்த வட்டுவாகலில் வைத்துக் கையளித்ததற்கான ஆவணங்களுடன் ஒரு கைப்பையை வைத்துக்கொண்டு திரிவதுதான் எங்கள் மக்களின் வாழ்க்கையாக உள்ளது.

எனவே இறுதிப்போரின் போது சொத்துக்களை இழந்து ஆவணங்களை வைத்துள்ள மக்களுக்கு காயப்பட்டவர்கள் உறவுகளை இழந்தவர்களுக்கான நட்டஈடுகள் இதுவரை கொடுக்கப்படாது இருக்கின்றன. அவற்றைக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று மக்கள் சார்பாக வேண்டி நிற்கின்றேன்-என்றார். (ஐ)

# கொழும்பில் 50,000 வீடுகள்

கொழும்பு, ஏப்.07

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக 50 ஆயிரம் வீடுகளை அமைக்க உள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொரளையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

50 ஆயிரம் வீடுகளை அமைப்பதன் ஊடாக இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் மக்கள் வாழும் சேரிப்புறப் பகுதிகளை இல்லாது செய்து, அந்த இடங்களை வர்த்தக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தலாம் எனக் கூறினார். (ஐ)

# சதொச தலைவர் கைது



கொழும்பு, ஏப்.07

சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நலின் ருவன்ஜீவ பெர்னாண்டோ, நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்று வெள்ளிக்கிழமை வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முற்பட்டவேளையில் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

2014 ஆம் ஆண்டு 3 கோடி 90 இலட்சம் ரூபா அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்திய சம்பவம் தொடர்பில் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் முன்னெடுத்துவரும் விசாரணைகளுக்கு அமைவாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# குழந்தைகள் சித்திரவதை இலங்கையில் அதிகம்

கொழும்பு, ஏப்.07

இலங்கையில் குழந்தைகளின் சித்திரவதைகள் அதிகரித்துள்ளதாக குழந்தை பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நடப்பு வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் 582 குழந்தைகள் சித்திரவதைகள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவாகியுள்ள முறைப்பாடுகளில் அதிகமானவை கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாலியல் சித்திரவதைகள் உட்பட பல சித்திரவதைகள் பதிவாகியுள்ளதாகவும், இதுகுறித்து தற்போத விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குழந்தை பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது. (ஐ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் கூட்டு எதிரணி சாதித்தவை என்ன?

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எண்ணிக்கையில் அடிப்படியில் பிரதமர் வெற்றிபெற்றிருந்தாலும், உண்மையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் கூட்டு எதிரணியினர் பல விடயங்களைச் சாதித்திருக்கிறார்கள்.

(1) கூட்டு அரசாங்கத்திற்கு இருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை சரிந்திருக்கிறது. சட்ட திருத்தங்கள், யாப்பு மாற்றங்களுக்கு அவசியம் தேவையாக இருந்த மூன்றில் இரண்டு பெரும் பான்மையை இழந்திருக்கும் அரசாங்கம், இனி அவ்வாறான முன்னெடுப்புகளைக்கையாளமுடியாதநிலையை உருவாக்கியிருக்கிறார்கள். சர்வதேசத்திற்கு வாக்குறுதியளித்த சில சட்டத் திருத்தங்கள் இன்னும் கிடப்பில் இருப்பதால், இது அரசாங்கத்திற்கு நெருக்கடியை நிச்சயம் ஏற்படுத்த போகிறது.

(2) 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடந்தபோது சுதந்திரக் கட்சியில் இருந்து வெறும் 20 வீதமாகப் பிரிந்து ஆரம்பித்த கூட்டு எதிரணி, படிப்படியாக வளர்ச்சியடைந்து சுதந்திரக் கட்சியின் 80 வீதத்தைக் கைப்பற்றியிருக்கிறது. தயாசிறி ஜெயசேகரா, எஸ். பி.திஸா நாயக்க, டிலான் பெரேரா, பிரியதர்ஷன யாப்பா போன்ற ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமானவர்கள் கூட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதன் ஊடாக சுதந்திரக் கட்சி முழுவதையும்தமது வீச்சுக்குள்கொண்டுவந்திருக்கிறார்கள் கூட்டு எதிரணியினர். தற்போதைய நிலையில், ஜனாதிபதி தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும். ஒன்றில் இவர்களுக்குக் கட்டுப்பட வேண்டும். இல்லையென்றால் அவர் தனிமைப்படுத்தப்படுத்தப்படுவார். ஐ.தே.கவுடன் முறுகல் நிலையில் இருக்கும் ஜனாதிபதிக்கு கூட்டு எதிரணியின் வலையில் வீழ்வதை தவிர அனேகமாக வேறு அரசியல் தெரிவுகள் இல்லை.

(3) ரணில் விக்கிரமசிங்கவைத் தொடர்ந்தும் பிரதமராகவும் ஐ.தே.க. கட்சியின் தலைமைத்துவத்திலும் வைத்திருப்பதும் கூட்டு எதிரணிக்கு பல விடயங்களில் அனுகூலமானது. கட்சியைப் புனரமைக்க போகிறோம், தலைமைத்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தபோகிறோம் என்கிற குரல்கள் ஒலித்தாலும், இந்த வாக்குறுதிகள் நடைபெறுவதற்குரிய வாய்ப்புக்கள் குறைவு என்பது ஐ.தே.க வின் தலைமைத்துவத்தை நீண்ட காலத்திற்கு அவதானிப்பவர்களுக்கு புரியும். இந்த வாரத்துக்குள்ளேயே மாற்றங்கள் நடக்கும் என்கிறார்கள். வழமை போல ஒரு குழுவை நியமித்து காலத்தை இழுத்தடிப்பு செய்தால் அது கூட்டு எதிரணிக்கு வாய்ப்பாகவே இருக்கும்.

(4) இந்த அரசாங்கத்தை பதவிக்கு கொண்டுவந்த சிறுபான்மைக் கட்சிகளை - அதிலும் குறிப்பாக முஸ்லிம் கட்சிகளை - இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை ஊடாக திக்குமுக்காட வைத் திருக்கிறார்கள். இறுதிநாள் வரை தீர்மானங்கள் இழுத்தடிக்கப்பட்டு, இறுதியில் பிரதமருக்கு ஆதரவு தருவோம்என்று அறிவித்தாலும், நாடாளுமன்றத்தில் முஸ்லிம் உறுப்பினர்கள்தடுமாறியமையை அவதானிக்க கூடியதாக இருந்தது. ரவூப் ஹகீம் எதோ பேசினார். ஆனால்என்னபேசினார்என்று அனேகமாக அவருக்கே புரிந்திருக்காது. கட்சித் தலைவர்களுக்குப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தும் ரிஷாத் பதியுதீன் பேசுவதில் இருந்து ஒளிந்து கொண்டார். முஸ்லிம்களுக்குமிகவும்நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் நாட்டு மக்களின் கவனமும் குவிந் திருந்த முக்கியமான தருணத்தில் தைரியமாக தமது முடிவுகளையும் கோரிக்கைகளையும் முன் வைத்து பேசுவதை முஸ்லிம் எம்பிக்கள் தவிர்த்துக் கொள்ளும் விதத்தில் ஒரு நெருக்கடி நிலையை கூட்டு எதிரணியினர் உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.



(5) தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் சுமந்திரன் நேர்த்தியாகப் பேசியிருந்தாலும், உள்ளூராட்சி தேர்தலில் அவர்களுக்கு ஏற்பட்ட பின்னடைவுகளின் பின்னணியில், தமிழ்க் கூட்டமைப்புக்கான உள்ளக மற்றும் வெளியக நெருக்கடிகளை அதிகரிக்கும் சந்தர்ப்பத்தையும், ஆளுங் கட்சியை நம்பியிருக்கும் உத்தியோக பூர்வ எதிர்க்கட்சி என்ற விம்பத்தையும்இந்தநம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பொது எதிரணி தமிழ்க் கூட்டமைப்பின் மேல் ஏற்படுத்தியிருக்கிறது.

உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் பலமான அரசியல் அத்திபாரத்தைப் பெற்ற நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்த கூட்டு எதிரணி வெற்றிபெறவும் இல்லை; அதே நேரம் அவர்கள் இழந்ததும் எது வும் இல்லை. ஆனாலும் இன்னும் இரண்டு வருடங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல்கள், ஜனாதிபதி தேர்தல் நடக்கவிருக்கும் நிலையில் தமக்கு எதிரான தரப்புகளை , இந்த நம்பிக்கை யில்லாப் பிரேரணை மூலம் அவர்கள் இருந்த நிலையைவிட நெருக்கடியான நிலைக்கு கூட்டுஎதிரணியினர்தள்ளிவிட்டிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. (உ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைக்கிறேன்.

*"தனது பதவிக் காலம் முடிந்தவுடன்தோளில்துண்டைத்தூக்கிப் போட்டுக் கொண்டு வந்த வழியே கொழும்புக்குத் திரும்பி விடுவார் முதல்வர். நான் சொல்லுகிறேன் இருந்து பாரும்."* – என்றார் யாழ். சிவன் கோவிலடி அந்தி மாலைப் பொழுது அரட்டையர் கழக அங்கத்தவர் ஒருவர்.

ஆனால் அரசியல் வட்டாரங்களில் குசுக்குசுக்கப்படும் செய்தியோ வேறு.

*"பொறுத்த நேரத்தில் முதல்வர் தனிக் கட்சி தொடங்குவார். அதற்கு பூர்வாங்கமாகத்தான் அவரது ஆசீர்வாதத்துடன் 'தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தை ஐங்கரநேசன் தொடங்கியிருக்கின்றார். உலக நாடுகள் பலவற்றில் இருப்பது போலவே 'பசுமை இயக்கம்' விரைவில் 'பசுமைக் கட்சியாக' மாறும். அந்த ஆரம்ப விழாவையும் முதல்வரே முன்னின்று நடத்தி வைத்தார். கட்சி ஆரம்பிக்கும் பணியைக் கனகச்சிதமாகக் காய் நகர்த்தி முன்னெடுக்கின்றார் முதல்வர்."*– என்று ஊடக நண்பர் ஒருவர் அடித்துக் கூறினார்.

நான் அவரை மறுத்துப் பேசினேன்.

*''உங்கடை பத்திரிகைக்காரத் தனம் எனக்கும் தெரியும். உங்களுக்கு ஈர் கிடைச்சால் போதும், ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கி விடுவீர்கள். ஆனால் உங்கள் பருப்பு என்னட்டை அவியாது."* – என்றேன், ஏதோ நான் மட்டும் கை, கால் வைத்து – கையால், மடியால் போட்டு – எழுதாத உத்தம பத்திரிகையாளன் போல.

ஆனால், பல தரப்போடும் பழகுகின்ற அந்த ஊடக நண்பர் அடித்துக் கூறினார்.

*" இல்லை. கனக்க நடக்குது. வெளியிலை தெரியேல்ல. முதல்வர் மனசுக்குள்ள ஒரு 'பிளான்' போட்டிட்டார். தமிழ் மக்கள் பேரவையைக் கட்சியாக்க மாட்டார். அது அப்படியே மக்கள் இயக்கமாய் இயங்கும். புதுக் கட்சியிலே சிவில் சமூகத்தைச் சேர்ந்த ஐம்பது வீதத்தினருக்கு முக்கிய இடமளிக்கப்படும். மிகுதி ஐம்பது வீதமும் தேர்தலிலை நிக்கிற 'புறொமினன்ட்' தலைகளுக்கு. தேர்தலிலை நிற்கிறவையளுக்கு கட்சி நிர்வாகத்தில் முக்கிய இடம் இருக்காது. கட்சி நிர்வாகத்திலை முக்கிய இடம் வகிக்கிறவையள் தேர்தலிலை நிக்கப்படாது."*– என்றெல்லாம் வெட்டிப் பிளந்தார் அந்த நண்பர்.

*"ஐந்து வருடமாக முதலமைச்சராக இருந்த ஒருவர் ஒண்டும் இல்லாமல் வீட்டிலை போய் சும்மா ஓய்வெடுப்பாரா? ஓய் வெடுக்க மனம் விடுமா? அதுவும் முதல்வர் விக்னேஸ்வரன் போல மக்கள் செல்வாக்கைக் கட்டி வளர்த்த ஒருவர் பொத்தெண்டு எல்லாவற்றையும் விட்டுவிட்டு வீட்டிலை போய்க் கிடக்க முடியுமோ?"*– என்றும் அவர் சொன்னார்.

*"அதை வைச்சுத்தான் கூட்டமைப்புக்காரர் காய்நகர்த்துகினம் எண்டு கேள்விப்பட்டேன்....!"* – என இழுத்தேன் நான்.

*"விக்கிக்குத்தான் திரும்பவும் முதலமைச்சர் பதவி கொடுக்க வேணும் எண்டு சம்பந்தன் ஐயா கருதுகிறாராமே....?"*– என்றேன்.

*" ஓ... அப்படியும் ஒரு கதை போகுது. அப்படி சம்பந்தன் முயன்றால் இந்த முறை அவருக்கு எதிராகவே கட்சிக்குள்ள போராட்டம் வெடிக்கும் எண்டு சொல்லுகினம். மாவையர், சுமந்திரன், சிவஞானம் யாவரும் அதுக்கு விடவே மாட்டினம். இந்த முறை சம்பந்தனுக்கு இந்தத் தெரிவிலை அவையள் மறுத்தான் குடுப்பினம். பக்கத்து வீட்டுக்காரர் அழுத்தம் தருகினம் எண்டு சம்பந்தர் சொன்னால் கூட மாவையரிலிருந்து சுமந்திரன் வரை கெம்பி நிண்டு மறிப்பினம்...."* – என்றார் நண்பர்.

"அது, மாத்திரமல்ல, உந்த முதல்வருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து முதல்வருக்கும் ஒரு எச்சரிக்கை உஷார் போயிருப்பதாகத் தெரிகிறது. 'உங்களுக்குத்தான் திரும்பவும் முதல்வர் பதவி எண்ட கதையைக் கூட்டமைப்புக்குள்ளாலையே கசியவிடுவினம். அந்த ஆசையை – நம்பிக்கையை – உங்களுக்கு ஏற்படுத்தி, அதன் மூலம் புதுக் கட்சியை ஆரம்பிப்பதையோ மற்று ஏற்பாட்டையோ நீங்கள் செய்யாமல் இருப்பதை உறுதிப் படுத்திக் கொள்ளுவினம். அப்படி நம்பிக்கையைத்தந்து, காலத்தை இழுத்து, கடைசியிலை உங்களைக் கைவிட்டு நடுறோட்டிலை விட்டுவிடுவினம். ஆகவே அதற்கு எடுபட்டு விடாதீர்கள்!' என்று முதலமைச்சருக்கும் உஷார் எச்சரிக்கை கொடுக்கப் பட்டிருக்கின்றது."– என்றார் அந்த நண்பர்.

முதல்வர் கூட்டமைப்புக்கு எதிராகக் கிளம்பாமலும், அடுத்த மாகாண சபைத் தேர்தலிலை கூட்டமைப்புக்கு எதிராக நிறுத்தப்படும் அணியில் அவர் சேராமலும் இருப்பதை உறுதிப் படுத்துவதற்கு மாற்று வழி ஒன்றை – கனகாத்திரமான யோசனை ஒன்றை – இவ்வார முற்பகுதியில் நடந்த கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஒரு எம்.பி. வெளியிட்டார். ஸ்ரீதரன் எம்.பி.தான் அவர்.

*"சும்மா... முதல்வரோடை மோதிக் கொண்டு, பிளவுபட்டு நிக்கிறது மக்களுக்கும் நல்லதில்லை.... கூட்டமைப்புக்கும் நல்லதில்லை."* – என்று ஆரம்பித்தார் அவர்.

*''கடந்த நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்துக்கு சம்பந்தன் ஐயா யாழ்ப்பாணம் வந்திருந்த போதே, ஐயாவை முதல்வர் வீட்டுக்குப் போய் அவரைச் சந்தித்து ஒரு தேநீர் குடித்து விட்டு வாங்கோ என்று கூறினேன். அப்பவே அவரைச் சமாளிச்சிருக்க வேணும். நாங்கள் செய்யவில்லை. ஒரு வருஷத்துக்குப் பிறகு, கிளிநொச்சிக்கு எங்களின் அலுவலகம் திறப்பதற்கு வந்த சம்பந்தன் ஐயா, 'சிறி... நான் ஒரு பிழை விட்டு விட்டேன். நீங்கள் சொன்னபடி முதலமைச்சரைப் போய் நான் பார்த்து, அவரை அப்பவே நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்துக்குக் கூட்டி வந்திருக்க வேணும். எண்டு என்னிடம் சொன்னவர்.' இப்பகூட முதல்வர் எழுதி, எழுதி, எடுத்து வந்து வாசிக்கிறார். அந்த வேலையை அவர் செய்யுறதுக்குக் கனகச்சிதமான இடம் பார்லிமெண்ட் தான். இப்ப... முதலமைச்சர் பதவிக்கு மாவை அண்ணனை நிறுத்திறது எண்டு முடிவு எடுத்தால் அதைச் செய்யுங்கோ... ஆனால் முதல்வர் விக்கியை அதுக்குப் பதிலா பார்லிமெண்டுக்கு அனுப்புங்கோ... தேசியப் பட்டியலிலை பெயர் இருக்கிற எல்லோரிட்டையும் 'றிசைன் லெட்டர்' வாங்கினா புதுசா பட்டியலுக்குப் பெயர் சேர்க்கலாம். அந்தப் பெயரிலை விக்கி ஐயாவையும் போட்டு அவரை எம். பியாக்கிவிடுங்கோ... பிரச்சினை தீர்ந்தது.... அவருக்கும் அது தான் சரியான இடம்...!"* – என்றார் ஸ்ரீதரன்.

இப்படி ஸ்ரீதரன் நாடாளுமன்றக் குழுவிலை கூறிய போது வேறு சில எம்.பிக்கள் தமது எதிர்ப்பை முணுமுணுப்பாகக் காட்டிக் கொள்ளத் தவறவில்லை.

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி...' – என்ற மாதிரி நீதித்துறைச் சேவை முடித்து, ஓய்வெடுத்து, தம்பாட்டில் விரதம், கோயில், திருநீறு என்று அமைதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த மனுஷனை, தேடிப் போய் இழுத்து வந்து முதல்வராக்கிப் போட்டு, இப்போது ஏதோ மடியுக்குள்ளை இருந்து குடைவது போல துடித்தால் யார் என்ன செய்ய முடியும்?

**- மின்னல் -**

## நூல்கள் விற்பனைக்கு

### சேமமடு பதிப்பகம், பத்மம் பதிப்பகம்

2017 கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை (EPAB) அங்கீகரித்த சுமார் 180 நூல்கள் (40 சிறுவர் நூல்கள்) போதியளவு கையிருப்பில் உள்ளன. மொத்தமாகவும் சில்லறையாகவும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். இந்தியா தமிழ்மண் பதிப்பகத்தின் நூல்களும் கையிருப்பில் உள்ளன.

'சேமமடு புத்தகசாலை'

சேமமடு

Chemamadu Book Center, Publication
UG - 50, People's Park, Colombo - 11
Mob - 0777 - 345666, 071 - 2726778
Tel- 011 - 2331475, Fax - 2448624
Mail - chemamadu@yahoo.com

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இனி, தீர்வுக்கு வழி யாது?

நல்லாட்சி அரசு - தேசிய அரசு - தேய்ந்து விட்டது. கூட்டுக்குள் குழப்பம். அதனால் அரசின் ஸ்திரத்தன்மை வெகுவாகக் குறைந்துவிட்டது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், நாடாளுமன்றத்தில் இடம்பெற்று வந்த பல்வேறு முக்கிய வாக்கெடுப்புகளின் போது அது நிலைநாட்டி வந்த தனித்துவம், கடைசியாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது தகர்ந்துவிட்டமை அரசியல் அவதானிகளால் கவனிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் போதும் சரி, மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டம் போன்றவற்றின் போதும் சரி, அல்லது வருடம் தோறும் வந்த மூன்று வரவு - செலவுத் திட்டங்களின் போதும் சரி, அரசு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நிலைநாட்டி வெளிப்படுத்தி வந்தது.

தற்போதைய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 225. அதில் மூன்றில் இரண்டு பங்கு என்பது 150.

முக்கிய வாக்கெடுப்புகளில் நல்லாட்சி அரசு 150 இற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுத் தனது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நிரூபித்தே வந்தது. எந்தச் சந்தர்ப்பத்திலும் எதிர்த்தரப்புக்கு 75 இற்குக் கூடிய எம்.பிக்களின் ஆதரவு வராமல், தனது பெரும்பான்மையை நல்லாட்சி அரசு தெளிவாக உறுதிப்படுத்தி, வெளிப்படுத்தி வந்தது.

ஆனால், பிரதமர் ரணில் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் இது தகர்ந்துவிட்டது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 46 மேலதிக வாக்குகளால் தோற்கடித்தார் என்பது உண்மைதான். ஆனால், அவருக்கு எதிராக 76 வாக்குகள் விழுந்துள்ளன. அவரை ஆதரித்து 122 எம்.பிக்களுடன், வாக்களிப்பில் கலந்து கொள்ளாத 26 எம்.பிக்களும் சேர்ந்தால் கூட, மொத்தம் 148 எம்.பிக்களின் ஆதரவுதான் அவருக்குக் கிட்டும். அது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறப் போதுமானதல்ல. இன்றைய நிலையில் இதுதான் யதார்த்தம்.

தென்னிலங்கை அரசியல் சக்திகள் பிளவுபட்டு நிற்கின்றமையைப் பார்க்கும் போது இந்த நாடாளுமன்றத்தில் இனிமேல் பிரதமர் ரணில் தலைமையிலான அரசு ஒன்றால் ஏதேனும் ஒரு விடயத்துக்காக மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பலத்தைத் திரட்டுவது என்பது துர்லபமே.

இந்த யதார்த்தத்தின் அடிப்படையில்தான் தங்களின் எதிர்கால அரசியல் செல்நெறி வியூகங்களை அமைக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் தமிழர்கள்.

இந்த நாட்டின் நீண்டகால இனச் சிக்கலுக்கு - தேசிய இனப் பிரச்சினைக்கு - நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய ஒரு தீர்வைக் காணும் விதத்தில் ஒரு புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியை இந்த நல்லாட்சி அரசு ஆரம்பித்தது என்பது வாஸ்தவம் தான்.

தடைப்பட்டுக் கிடக்கும் அந்த முயற்சியை சித்திரைப் புதுவருடப் பிறப்புடன் மீளப் புத்துயிர்ப்புக் கொடுத்து ஆரம்பிக்கலாம் என இப்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்க் கூட்டமைப்புக்கு உறுதியளித்திருந்தாலும் கூட, தற்போதைய அரசின் பதவிக் காலத்தில் அது சாத்தியமா என்ற கேள்வி எழுகின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு முதலாவது தடை - அதற்கு ஆதரவாக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் பெறுதல்.

அடுத்த இடைஞ்சல் - சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றில் மக்களின் அனுதியை அதற்குப் பெற்றுக்கொள்ளுதல்.

இப்போதைய தென்னிலங்கை அரசியல் சூழலில் இவை சாத்தியமா என்பதே கேள்வி.

புதுவருடத்துக்குப் பின்னர் மீண்டும் நாடாளுமன்றத்தை அரசமைப் புப் பேரவையாகக் கூட்டி, ஏற்கனவே புதிய அரசமைப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இடைக்கால அறிக்கையின் அடிப்படையில் நகல் அரசமைப்பு வடிவம் ஒன்றை முன்வைத்து, காரியங்களை நகர்த்தினாலும் கூட, நாம் முன்னர் குறிப்பிட்ட மேற்படி இரண்டு இடைஞ்சல்களையும் தாண்டி, இந்த விடயம் முன்னேறுவது - ஒப்பேறுவது - சாத்தியமா?

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் அதனை ஆதரித்து வாக்களித்த ஜே.வி.பியின் 6 எம்.பிக்களும் புதிய அரசமைப்பு முயற்சியை ஆதரிப்பர் என்று வைத்தாலும்கூட, அதனை வைத்துக்கொண்டு உத்தேச புதிய அரசமைப்பு நகலுக்கு மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவைப் பெறுதல் என்பது இன்றைய நிலையில் அது சாத்தியமற்றது என்றே தோன்றுகின்றது.

இந்த இடைஞ்சல்களைத் தாண்டி, அந்த முயற்சியை முன்னகர்த்தும் அரசியல் வல்லமையும், துணிவும், திடசங்கற்பமும் உறுதிப்பாடும் ரணிலின் அரசுக்கு உண்டா?

இன்று தமிழர் முன் பூதாகரமாகி நிற்கும் கேள்வி இதுதான்!

இத்தகைய பின்புலத்தில் தன்னுடைய எதிர்கால வியூகங்களைத் தமிழர் சார்பில் அவர்களை நாடாளுமன்றில் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வகுக்க வேண்டியதாக இருக்கின்றது. நாடாளுமன்றம் ஊடான புதிய அரசமைப்பு உருவாக்கமும் அரசியல் தீர்வு நடவடிக்கைகளும் இனியும் இப்போதைக்குச் சாத்தியமா, அவை சாத்தியமாயின் எந்த வகையில் சாத்தியம், இல்லையேல் வேறு என்ன வழிமுறையில் இந்த விடயத்தை அணுகுவது என்பன பற்றியெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது மக்களுக்கு விளக்க வேண்டிய, தட்டிக் கழிக்க முடியாத கடப்பாட்டுச் சூழல் ஏற்பட்டிருப்பதாகக் கொள்ளலாம்.

# அரசில் இருந்து வெளியேறாதீர்!

## ஜனாதிபதி கூறினார் என அமைச்சர் எஸ்.பி. தகவல்



கொழும்பு, ஏப்.07

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்களை அரசிலிருந்து வெளியேற வேண்டாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியதாக அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசுக்கு எதிராக வாக்களித்த அமைச்சர்களை அரசில் இருந்து வெளியேற்ற வேண்டுமென, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமைகளில் இருந்து பல்வேறு அழுத்தங்கள் அதிகரித்தன.

இந்நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், ஜனாதிபதி அனைவரையும் தொடர்ந்து அரசாங்கத்தில் நீடிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். பிரதமருக்கு எதிராக வாக்களித்தவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர் என கூறினார். (ஐ)

# போரில் பாதிப்புற்றோருக்கு முல்லைத்தீவில் இழப்பீடுகள்



முல்லைத்தீவு, ஏப்.06

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த காலப் போரின் போது சொத்துக்களை இழந்த ஒரு தொகுதியினருக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டன.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற போர் நடவடிக்கையின்போது மக்களுக்கு இடம்பெற்ற உயிர் மற்றும் சொத்தழிவுகள் தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சு விவரம் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

அதற்கமைய நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்கள் மற்றும் ஆலயங்கள், பொதுமக்கள் என 338 பேருக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டன.

இந்த இழப்பீடு வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் பி.சுரேஸ் மற்றும் அமைச்சின் அலுவலக அதிகாரிகள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், சாந்தி சிறீஸ்கந்தராசா, பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதி உதவியை வழங்கினர். (ஐ)

# சிறுமி துஷ்பிரயோகம்; கைதானார் வயோதிபர்

முல்லைத்தீவு, ஏப்.07

முல்லைத்தீவு – சிலாவத்தை தியோ நகர் பகுதியில் உறவினர்களுடன் வாழ்ந்த சிறுமிக்கு வயோதிபர் ஒருவர் தொடர்ச்சியாகப் பாலியல் தொந்தரவு கொடுத்து வந்துள்ளார் எனச் சிறுமியின் உறவினர்களால் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நேற்று மாலை 73 வயதுடைய வயோதிபரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். 8 வயதுச் சிறுமி மருத்துவப் பரிசோதனைக்காக மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.07

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்களால் சாவகச்சேரி நகர சபைக்கு தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக் கிழமை காலை 9மணிக்குச் சாவகச்சேரி சிவன் கோவிலில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாசனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சாவகச்சேரி நகரசபைக்குத் தெரிவான தவிசாளர், உப தவிசாளர் உள்ளிட்ட 18உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களை நகரசபை நிர்வாகத்தினர் மற்றும் பொது மக்கள் இணைந்து கௌரவித்தனர். பின்னர் சாவகச்சேரி சிவன் கோவிலில் இருந்து பொன்விழா மண்டபம் நோக்கி மக்கள் பிரதிநிதிகள் வரவேற்கப்பட்டு, பொன்விழா மண்டபத்தில் சர்வமதப் பிரார்த்தனைகள் மற்றும் ஆசீர்வாதத்தின் பின்னர் நகரசபை சபா மண்டபத்தில் கன்னி அமர்வு முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெற்றது.

நகரசபை உறுப்பினர்கள் கௌரவிப்பு நிகழ்வில் நகரசபை செயலாளர் கா.சண்முகதாசன், முன்னாள் நகரசபை தவிசாளர் தேவசகாயம்பிள்ளை, வைத்தியர் லயன் அருளானந்தம் மற்றும் கட்சிகளின் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு உறுப்பினர்களை வாழ்த்தினர். (ஐ-21)

## நாளை

08.04.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : பூராடம் மாலை. 5.46 வரை
திதி : அட்டமி பி.இ. 2.08 வரை
சுபநேரம் : 9.07 – 10.37 வரை
இராகுகாலம் : 4.37 – 6.07 வரை

# முஸ்லிம்களுக்கு எதிரான இன வன்செயல்கள்; ஐரோப்பிய ஒன்றியத்திடம் ஹக்கீம் விளக்கம்





முஸ்லிம்களுக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற இனவாத வன்செயல்கள் மோசமடைவதற்கு வெறுப்பூட்டக் கூடிய பேச்சுகளை தடைசெய்வதற்கான சட்டபூர்வ ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை, புலனாய்வுத்துறையின் அசமந்தப்போக்கு, தாக்குதல்களை கட்டுப்படுத்த உடனடியாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமை போன்றவையே முக்கிய காரணங்களாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் 11 பிரதிநிதிகளைக்கொண்ட - ஜன்சஹ்றாடில் மேப் தலைமையிலான - உயர்மட்ட தூதுக்குழுவை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நாடாளுமன்ற அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

பிரஸ்தாப கலந்துரையாடலின்போது அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஒன்றிய பிரதிநிதிகளிடம் மேலும் கூறியவை வருமாறு:-

மூன்று தசாப்தகாலம் நீடித்த கொடூர யுத்தம் முடிவடைந்து நாட்டில் அமைதி நிலவ ஆரம்பித்தசூழ்நிலையில், சிறுபான்மை சமூகங்களில் முஸ்லிம்கள் மீதான இனவாத செயல்களை அரசியல், பொருளாதார உள்நோக்கங்களை வைத்து தீய சக்திகள் முன்னெடுத்து வருகின்றன.

உங்களுடைய நாடுகளில் இவ்வாறான வன்செயல்கள் நடக்க நேரும்போது உளவுத்துறை அதனை விரைவாக கண்டறிந்து விடுவார்கள். ஆனால், விழிப்புடனிருந்து துப்புத்துலக்கக்கூடிய உளவுத்துறையின் செயற்பாடு இங்கு மந்தகதியிலேயே இருக்கின்றது. அத்துடன், வெறுப்பூட்டக்கூடிய பேச்சை கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை.

மனித உரிமை மீறல் விடயங்கள் பற்றியும், யுத்தக் கைதிகளின் புனர்வாழ்வு மற்றும் விடுதலை பற்றியும் பரவலாக பேசப்படுகின்றது. அதுபற்றி தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் வலியுறுத்தி வருகின்றமையோடு பொது அமைப்புக்களும் குரல் கொடுத்து வருகின்றன.

முஸ்லிம்களுக்கெதிரான அண்மைய இனவாத வன்செயல்களையடுத்து நாட்டுக்கு வரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இங்கு முதலீடுகளை மேற்கொள்வதற்கும் முதலீட்டாளர்கள் தயக்கமடைந்துள்ளனர்.

தேசிய அரசாங்கம் அபிவிருத்தி நட வடிக்கைகளை முன்னெடுத்து வரும் அதேவேளை, நாட்டில் பெரும் பிரச்சினையாக உருவாகியுள்ள இனங்காணப்படாத சிறுநீரக நோயை கட்டுப்படுத்தவதற்கு பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் தோறும் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

எனது பொறுப்பிலுள்ள நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சைப் பொறுத்தவரை, சுத்தமான குடிதண்ணீர் விநியோகத்தை நாட்டின் பல பகுதிகளுக்கும் விஸ்தரித்து வருகிறது. நிலத்தடி நீர்மாசடைந்துள்ள பிரதேசங்களிலும், சுத்தமான குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவும் பிரதேசங்களிலும் கடல் நீரை சுத்திகரித்து பாவனையாளர்களுக்கு வழங்குவதற்கு நவீனதொழில்நுட்பமுறைகளைகையாண்டு நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் நோக்கத்தில் நாடாளுமன்றத்தில் பிரதமருக்கு எதிராக கூட்டு எதிரணியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிகரமாக முறியடித்துள்ளோம்.- என்றார்.

அமைச்சர் கூறியவற்றை கவனமாக செவிமடுத்த ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினர் மேற்படி விடயங்கள் மீது போதிய கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் பிரதியமைச்சர்களான எச்.எம்.எம். ஹரீஸ், பைசால் காசிம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். தௌபீக், ஏ.எல்.எம். நசீர், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதித் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எச்.எம்.சல்மான் ஆகியோரும் பங்குபற்றினர்.

(உ)

## தேர்தல்களுக்கு தயாராகுமாறு ஐ.தே.கவினருக்கு ரணில் அழைப்பு



தேர்தல்களை எதிர்கொள்ளத் தயாராகுமாறு, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களிடம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கூட்டு எதிரணியின் நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்த வெற்றியைக் கொண்டாடும் வகையில், ஐ.தே.க தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் விருந்து இடம்பெற்றது.

இதில் உரையாற்றிய பிரதமர், தனக்கு எதிரான பிரேரணையைத் தோற்கடிக்க துணை நின்ற கட்சியினருக்கு நன்றி தெரிவித்தார்.

'என்னைப் பதவி கவிழ்ப்பதன் மூலம், ஜனாதிபதி தலைமையிலான கூட்டு அரசாங்கத்தைப் பதவி கவிழ்ப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

''நம்பிக்கையில்லாப் பிரேரணை 46 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு பதவிக்கு வந்த பின்னர், ஐ.தே.க அடைந்துள்ள மிகப்.பெரிய வரலாற்று வெற்றி இது.

''ஒற்றுமையின் மூலம் வெற்றி பெறலாம் என்பதை காட்டியிருக்கிறோம். இனி அடுத்ததாக, மாகாண சபை, நாடாளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்களுக்குத் தயாராக வேண்டும்.

''அதிகாரத்தைக் கைப்பற்ற முனையும், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளின் திசைதிருப்பல்களுக்கு அகப்படாமல், ஒற்றுமையுடன் தேர்தல்களுக்குத் தயாராக வேண்டும்''. என்றும் அவர் கூறியுள்ளார்.

# தனியார் கல்வி நிறுவனங்கள் இனிமேல் பாடசாலை நேரத்தில் இயங்க முடியாது

### தடை வருகின்றது என்கிறார் கல்வி அமைச்சர்

பாடசாலை நேரத்தில் - காலை 7.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரையான நேரத்தில்- தனியார் வகுப்புகளுக்குத் தடை விதிக்கப்படவுள்ளதாகவும் அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைத் தாம் விரைவில் சமர்ப்பிப்பார் எனவும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வாய் மூல விடைக்கான வினா நேரத்தின் போது கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கல்வி பொதுதராதர உயர்தர பரீட்சையில் பாடசாலையின் ஊடாக இரு தடவைகளே தோற்ற முடியும். எனினும் தனிப்பட்ட முறையில் எத்தனை தடவை வேண்டுமானாலும் பரீட்சார்த்திகள் தோற்ற முடியும். உயர்கல்வி அமைச்சுதான் இதனை தீர்மானிக்கும். என்றாலும் வெள்ளம் உட்பட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் இரண்டாவது தடவை தோற்றியபோது அனர்த் தங்கள் ஏற்படும் பட்சத்தில் மூன்றாவது தடவையும் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க முடியுமா என்பது குறித்து ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.

"அத்துடன் தற்போது நாம் பாடசாலை ஆசிரியர்களின் பற்றாகுறையை நிவர்த்தி செய்து வருகின்றோம். பல ஆசிரியர்களை இணைத்துள்ளோம். இந்நிலையில் தனியார் வகுப்புகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும். தனியார் வகுப்புகளின் தாக்கம் அதிகமாக உள்ளது. பாடசாலை மட்ட கல்வியை ஊக்குவிப்பதற்கு நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். இதன் பிரகாரம் வார நாள்களில் பாடசாலை நடைபெறும் காலை 7.30 மணி தொடக்கம் 1.30 வரையான நேரத்தில் தனியார் வகுப்புகளுக்குத் தடை விதிக்கவுள்ளேன். அதற்கான அமைச்சரவை பத்திரத்தை விரைவில் சமர்ப்பிப்பேன்.- என்றார்.

# இராணுவ ஒத்துழைப்புக்கு ரஷ்யாவுடன் உடன்படிக்கை

### அனுமதி வழங்கியது அமைச்சரவை

ரஷ்யாவுடனான இருதரப்பு இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையிலான உடன்பாட்டில்கையெழுத்திடும் யோசனைக்கு இலங்கை அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன இந்த யோசனையை அமைச்சரவையில் முன்வைத்திருந்தார்.

தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கிலும், இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர நம்பிக்கையை வலுப்படுத்தும் நோக்கிலும், இந்த இருதரப்பு இராணுவ ஒத்துழைப்பு உடன்பாட்டு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு இலங்கை அமைச்சரவை கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதி அளித்துள்ளது.

# அம்பாறையில் 26 ஆயிரம் ஏக்கர் மட்டுமே சிறுபோக வேளாண்மை செய்ய அனுமதி

அம்பாறை,ஏப்.07

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை சிறுபோக வேளாண்மைச் செய்கைக்காக 26ஆயிரம் ஏக்கர் வயல்நிலத்தில் மாத்திரமே செய்கை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் நேற்று அம்பாறை அரச அதிபர் துசஜத பிவணிகசேகர தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அங்கு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள பிரதம பொறியியலாளர் நிஹால் செனவிரட்ண, மாவட்ட விவசாய பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. ஹலீஸ் உள்ளிட்ட உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பல தரப்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு அரச அதிபர் வணிகசேகர கூறுகையில் –

நாட்டிலேற்பட்ட வறட்சி காரணமாக அம்பாறை மாவட்டத்திற்கு நீர்ப்பாசனம் வழங்கும் அம்பாறை சேனநாயக்க சமுத்திரத்தில் 65ஆயிரத்து 720 கன அடி நீர் மாத்திரமே தேங்கியுள்ளது.




இது மாவட்டத்திலுள்ள அனைத்து வயல்நிலங்களுக்கும் நீரை வழங்க போதுமானதாக இல்லை. எனவே 26ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களுக்கு மாத்திரமே நீரை வழங்க முடியும்.

கல்லோயா இடதுகரை வாய்க்காலிலுள்ள 10ஆயிரத்து 150ஏக்கர் வயல் நிலமும் வலதுகரை வாய்க்காலிலுள்ள 8ஆயிரத்து 200ஏக்கர் வயல் நிலமும் கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கிலுள்ள 2ஆயிரத்து 200ஏக்கர் வயல் நிலமுமே தண்ணீரைப் பெறும் வாய்ப்புள்ளது.

சம்பந்தப்பட்ட பிரதேச வயல் நிலங்களில் எதிர்வரும் ஏப்ரல் 31ஆம் திகதிக்கு முன்னர் விதைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் எனக்கேட்டுக்கொள்கின்றேன். மேலதிகமாக மழை பெய்தால் செய்கை பண்ணப்படும் நிலப்பரப்பின் அளவு கூட்டப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இதனால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்படவுள்ளனர் எனப் பிரதேச விவசாய அமைப்புக்கள் குற்றம்சாட்டியுள்ளன. (ப)

## தமிழ் தினப் போட்டிகள்

மட்டக்களப்பு,ஏப்.07

மண்முனை தென்மேற்கு கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான தமிழ்தினப் போட்டிகள் நேற்று இடம்பெற்றுள்ளன.

இந்தப் போட்டி நிகழ்வுகள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ந.தயாசீலன் தலைமையில் கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ணமிசன் வித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

இதன் போது, வாசிப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாடு, பேச்சு, பாவோதல், இசையும் அசைவும், இசை, நடனம், நாடகம் போன்ற போட்டிகளும் நடத்தப்பட்டுள்ளன.

போட்டி நிகழ்வில், வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள சுவாமி விபுலானந்தரது சிலைக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக் கால ஆசிரியர் ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# ஏறாவூர் நகர சபைக்குத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார் வாசித் அலி

ஏறாவூர்,ஏப்.07

ஏறாவூர் நகர சபை நிர்வாகத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் றம்ழான் அப்துல் வாசித் அலி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இத் தெரிவு நேற்றுமுன்தினம் கிழக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை. சலீம் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்த நிலையில், உப தலைவராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்ட மீராலெப்பை ரெபுபாசம் என்பவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமதின் ஆதரவாளர் அணியைச் சேர்ந்த வாசித் அலி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானாவின் ஆதரவு அணியைச் சேர்ந்த முஹம்மட் ஸாலி நழீம் ஆகியோர் தவிசாளர் தெரிவுக்கு பிரேரிக்கப்பட்டனர்.



இதன்போது, பகிரங்க வாக்கெடுப்பு இடம்பெற்ற நிலையில் வாசித் அலிக்கு 9 உறுப்பினர்களும், நழீம் என்பவருக்கு 7 உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்த அதேவேளை சீனி முஹம்மது ஜப்பார் எனும் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு உறுப்பினர் நடுநிலை வகித்தார்.

உப தவிசாளர் தெரிவுக்கு இருவர் பிரேரிக்கப்பட்டனர். அதில் ஒருவர் தாமாக விலகிக் கொண்டதின்படி மீராலெப்பை ரெபுபாசம் இயல்பாகவே உப தலைவரானார்.

புதிய தேர்தல் முறைமையின் படி கூடுதல் வாக்குகளைப் பெறாத பின் தங்கிய சிறிய கட்சிகள் மற்றும் சிறுபான்மைக் கட்சிகளுக்கும் ஆசனங்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## சுவிற்ஸர்லாந்து செல்லவுள்ள கிழக்குப் பல்கலை மாணவன்



மட்டக்களப்பு,ஏப்.07

கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் 3ஆம் வருட மாணவனாகிய கோவிந்தராசா கோகிலநாதன் சுவிஸில் நடைபெறும் ஓட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளார்.

சுவிற்ஸர்லாந்தில் சென்ட் கலன் நகரில் எதிர்வரும் மே மாதம் 6ஆம், 7 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சர்வதேச பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான ஓட்டப் போட்டியில் இவர் பங்கு கொள்வதற்காக சுவிற்ஸர்லாந்து செல்லவுள்ளார்.

இவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நெல்லிக்காடு, காஞ்சிரங்குடா கிராமத்தில் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்.

இலங்கை பல்கலைக்கழகத்தின் சார்பில் நான்கு வீரர்கள் பங்குபற்றும் இப்போட்டியில் ஸ்ரீஜெயவர்த்தனபுர, யாழ்ப்பாணம், களனி ஆகிய பல்கலைக்கழகங்களில் இருந்து தலா ஒவ்வொரு மாணவருடன் இம்மாணவர் கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து பங்குபற்றவுள்ளார்.

இவர் கடந்த காலங்களில் இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெற்று தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனைப் பிரதேசசபை விடுதலைப் புலிகள் கட்சி வசம்

திருகோணமலை,ஏப்.07

வாழைச்சேனைப் பிரதேசசபையை விடுதலைப் புலிகள் கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவுடன் கைப்பற்றியுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியிலிருந்து சோபா ஜெயரஞ்சித் தவிசாளராகவும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் தர்மலிங்கம் யசோதரன் உதவித் தவிசாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கருணா அம்மானின் சுயேச்சைக் குழு ஆகியன ஆதரவளித்திருந்த அதேவேளை –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று உறுப்பினர்களும் ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# லஞ்சம் வாங்கிய அதிகாரியை பிடித்துக் கொடுத்த பெண்

மட்டக்களப்பு,ஏப்.07

மட்டக்களப்பு – வவுணதீவு பிரதேச செயலகம், ஆயித்தியமலை பகுதியில் கடமை புரியும் கிராமசேவகர் ஒருவரை கொழும்பு இலஞ்ச ஊழல் ஒழிப்பு அதிகாரிகள் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

ஆயித்தியமலைக் கிராமத்தைச்சேர்ந்த பெண்ணிடம் 5 ஆயிரம் ரூபா மற்றும் 15 ஆயிரம் ரூபா பணத்தை பல தடவை லஞ்சமாகப் பெற்றுவந்த கிராமசேவையாளரை இலஞ்ச ஊழல் ஒழிப்பு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சியாக பல தடவைகள் பலரிடம் குறித்த கிராமசேவையாளர் லஞ்சம் பெற்று வந்துள்ளார்.

இந்த நிலையில் அக் கிராமத்தைச் சேர்ந்த பெண் ஒருவர், நுட்பமான முறையில் லஞ்ச ஊழல் ஒழிப்பு அதிகாரிகளை கூட்டிச் சென்று அவர்களுக்கு முன்னாலேயே பணத்தை லஞ்சமாக கொடுத்து கையும்களவுமாக பிடித்துகொடுத்துள்ளார்.

இது தொடர்பாக லஞ்ச ஒழிப்பு ஆணைக் குழு அதிகாரிகள் விசாரணையை முடுக்கி விட்டுள்ளனர்.

# ரணில் மீதான பிரேரணையின் உள்நோக்கம் சுதந்திரக் கட்சியை உடைப்பதுதானாம்!

## அக்கட்சியினருக்கு பிறந்துள்ள காலம் பிந்திய ஞானம்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டதாக வெளிக்காட்டப்பட்டாலும் சுதந்திரக் கட்சியைப் பிரிப்பதே அதன் உள் நோக்கமாக இருந்தமை நிரூபணமாகியிருப்பதாக அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க, விஜித் விஜிதமுனி சொய்சா மற்றும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகியோர் தெரிவித்தனர்.

எது, எவ்வாறாயினும் சுதந்திரக் கட்சியின் 41 உறுப்பினர்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன்ஒன்றாக இணைந்திருந்து சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்துவது உறுதியென்றும் அவர்கள் கூறினர். சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர்கள் இவ்வாறு கூறினர்.

பிரதமருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஜனாதிபதி முற்றிலும் நடுநிலைமையே வகித்தார். சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் விரும்பியவாறு செயற்படுவதற்கு ஜனாதிபதி பூரண சுதந்திரமளித்திருந்தார். அவர் எவரையும் வாக்களிப்பிலிருந்து விலகியிருக்குமாறோ அல்லது பிரேரணைக்கு சார்பாக வாக்களிக்குமாறோ உத்தரவு பிறப்பித்திருக்கவில்லை என சுட்டிக்காட்டிய அமைச்சர் மஹிந்த சமரசிங்க, 'என்னை இதனுடன் சம்பந்தப்படுத்த வேண்டாம். நான் இவ்விடயத்தில் பக்கச் சார்பாக செயற்படவிரும்பவில்லை. இப்பிரேரணை வென்றாலும் வெல்லா விட்டாலும் நாம் மறுநாள் 05 ஆம் திகதி முதல் ஆட்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். என்றாலும் சுதந்திரக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் ஒரே நிலைப்பாட்டில் இருப்பதே சிறந்தது'- என ஜனாதிபதி கூறியிருந்தார் எனவும் அமைச்சர் சமரசிங்க விளக்கமளித்தார்.

இதேவேளை, ஜனாதிபதியுடனான சந்திப்பைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் வீட்டில் கூடிய போதும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் வாக்களிப்பிலிருந்து விலகியிருப்பது என்றே ஏகமனதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. என்றாலும் சிலர் வாக்களிப்பின்போது தமது நிலைப்பாட்டை மீறி பிரேரணைக்குச் சார்பாக வாக்களித்துள்ளனர். உண்மையில் இது பிரதமரை தோற்கடிக்கச் செய்வதற்காக கொண்டுவரப்பட்ட பிரேரணையல்ல. சுதந்திரக் கட்சியை பிரிக்கும் எண்ணத்தில் கொண்டு வரப்பட்டதேயாகும். என்றாலும் நாம் இதற்காக கட்சிக்குள் பிளவை ஏற்படுத்திக் கொள்ளப் போவதில்லை என்றும் அமைச்சர் சமரசிங்க கூறினார்.

கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது அமைச்சர் சமரசிங்க மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி இவ்விடயம் தொடர்பில் எவ்வித நிலைப்பாட்டையும் அறிவித்திருக்காமையினால் அரசாங்கத்திலிருந்துகொண்டு பிரேரணைக்கு சார்பாக வாக்களித்தவர்கள் மீது எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கமுடியாது. அவ்வாறு வாக்களித்தவர்களை அரசாங்கத்திலிருந்து வெளியேற்றிய பின்னர் புதிய அமைச்சரவையொன்றை அமைப்பதா இல்லையா என்ற தீர்மானத்தை நாட்டுத் தலைவர்களான ஜனாதிபதியும் பிரதமருமே முன்னெடுப்பார்கள். அதுபற்றி கருத்து கூறுவதற்கு எம்மால் முடியாது.- என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்சா கருத்து தெரிவிக்கையில்,-

அரசாங்கத்திலிருந்து கொண்டு எம்மால் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்க முடியவில்லை. ஆரம்பத்தில் பிரதமர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்பதில் நானும் உறுதியாக இருந்தேன். ஐ.தே.க அதனை மறுக்கவும் நாம் அனைவரும் அந்த கோரிக்கையை கைவிட்டுவிட்டோம். ஐ.தே.க. தமிழ்தேசியக்கூட்டமைப்புடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டதாக வெளியான தகவல்கள் காரணமாகவும் சிலர் பிரேரணைக்குச் சார்பாக வாக்களித்தனர்.- எனக் கூறினார்.

அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கூறுகையில்-

இப்பிரேரணையில் பிரதமர் தோற்கடிக்கப்பட்டார் எனில், அதற்குப் பின்னர் யார் பிரதமர் என்ற தெளிவான கருத்து முன்வைக்கப்படாததன் காரணமாகவே பலர் பிரேரணையை ஆதரிக்கவில்லையென்றும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்தார்.

# ஐ.தே.க. பதவி நிலையினர் அனைவரையும் இன்றைக்கு முன்னர் விலக அறிவுறுத்தல்

## தவிசாளர், செயலாளர், பொருளாளர் ஏற்கனவே இராஜினாமா

கொழும்பு, ஏப். 07

ஐக்கிய தேசியக் கட்சியில் பதவி நிலைகளில் உள்ள அனைவரும் இன்று 07 ஆம் திகதிக்கு முன்னர் விலகிக்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்று அக்கட்சியின் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் கட்சி மறுசீரமைப்பு தொடர்பாக ஆராயும் கூட்டம் இடம்பெறவுள்ளது. அதன்போது புதிய நியமனங்கள், தெரிவுகள் குறித்து கவனம் செலுத்தப்படுமென சிறிகொத்த தலைமையக வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்புக்கு ஏதுவாக கட்சியின் பொதுச்செயலாளர் கபீர் ஹாஷிம், தவிசாளர் மலிக் சமரவிக்ரம, பொருளாளர் எரான் விக்ரமரட்ண ஆகியோர்தமது பதவிகளிலிருந்து நேற்று இராஜினாமாச் செய்துள்ளனர்.

இது தொடர்பான கடிதங்களை நேற்று அவர்கள் பிரதமரிடம் ஒப்படைத்துள்ளனர் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. உள்ளூராட்சித் தேர்தல்களின் பின்னர் கட்சி மறுசீரமைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டதன் காரணமாக அடுத்த இரண்டு மாதங்களுக்கிடையில் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருந்தார்.

இதன் பின்னணியில் நேற்றுமுன்தினம் காலை கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து அமைச்சர் கபீர் ஹாஷிம் இராஜினாமாச் செய்தார். அதனையடுத்து கட்சித் தவிசாளர் மலிக் சமரவிக்ரம, பொருளாளர் எரான் விக்ரமரட்ண ஆகியோரும் தமது பதவிகளிலிருந்து விலகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.கவின் மறுசீரமைப்புக்கு மேற்பார்வைக் குழு நியமனம்



நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்னர் தெரிவிக்கப்பட்டதன் படி ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இந்த வார இறுதியில் முழுமையாக முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்காக முழுமையான அதிகாரமுள்ள மேற்பார்வைக் குழு ஒன்றை நியமிக்கக் கட்சித் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன, உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் ஜே.சி. அலவதுவல உள்ளிட்ட அமைச்சர்கள் குழுவினால்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி இந்த மறுசீரமைப்பு யோசனை நாளைஞாயிற்றுக்கிழமை பிரதமரின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரணில் - கூட்டமைப்பு உடன்படிக்கை ஏதும் கையெழுத்திடப்படவில்லை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கான ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எந்த உடன்பாடும் கையெழுத்திடப்படவில்லை என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தெகிவளையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.



அமைச்சர் மனோ கணேசன் கூறுகிறார்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது நிலைப்பாட்டை எடுத்து வந்தது. பிரதமர் ரணில் அதற்குப் பதிலளித்திருந்தார் என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்ப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 10 கோரிக்கைகள் அடங்கிய நிபந்தனையை முன்வைத்திருந்தது.

அவை ஏற்றுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையிலேயே, நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தோம் எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக சுகாதார தினம் இன்று கொழும்பில் விசேட நிகழ்வுகள்

உலக சுகாதார நிறுவனம் ஏற்பாடு செய்யும் 70 ஆவது உலக சுகாதார தின வைபவம் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இலங்கையில் இடம்பெறவுள்ளது.

கொழும்பு தாமரைத்தடாக வளாகத்தில் இன்று முற்பகல் இடம்பெறவுள்ள இந் நிகழ்ச்சியில் பிரதமரும் பங்கேற்கவுள்ளார். அத்துடன், உலக சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமும், தெற்கு மற்றும் கிழக்காசிய நாடுகளுக்கான பணிப்பாளரும், 12 நாடுகளின் சுகாதார அமைச்சர்களும் இன்றைய நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது, இலங்கை சுகாதாரத் துறையில் இடம்பெற்ற 70 வருட முன்னேற்றங்கள் தொடர்பான பிரசுரங்கள் வெளியிடப்படவுள்ளன. இந்நிகழ்வை சிறப்பித்து முத்திரையொன்றும் வெளியிடப்படவுள்ளது. இன்று உலக சுகாதார தினம் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



# தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை நாளை

இளங்கலைஞர்மன்றம்வருடா வருடம் நடத்தி வரும் சற்குரு ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் 171 ஆம் ஆராதனை விழா –

நாளை ஞாயிறு காலை 9.30 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை நல்லூர், ஆடியபாதம் வீதியிலுள்ள மன்றத்தின் கலா மண்டபத்தில் இடம்பெறும்.

இளங்கலைஞர் மன்றத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறும் ஆராதனை விழாவில், ஈழத்து முதுபெரும் தவில், நாதஸ்வர கலைஞர்களும் இசைக் கலைஞர்களும் அணிசெய்கலைஞர்களும் இணைந்து நிகழ்ச்சிகளை வழங்கவுள்ளனர்.

இவ்வாராதனை விழாவில் ஈழத்தின் அனைத்து இசைக்கலைஞர்களையும் அணி இசைக் கலைஞர்களையும் வந்து கலந்து இசை அர்ச்சனை செய்து சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் அருள் ஆசியினைப் பெறுவதோடு அன்றைய தினம் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ

# தினசரி ராசி பலன்
## (07.04.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் பங்குனித்திங்கள் 24 ஆம் நாள் சனிக்கிழமை ஸப்தமித்திதி இரவு 11.30 மணி வரை. பின்னர் அஷ்டமி. நட்சத்திரம்: மூலம் பகல் 2.32 மணி வரை. பின்னர் பூராடம். சித்தயோகம் பகல் 2.32 மணி வரை. பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *காலை 09.09 மணி முதல் 10.41 மணி வரை*

**சுபநேரம்** - *மாலை 03.01 மணி முதல் 4.31 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *பங்குனி மாத தேய்பிறை ஸப்தமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- *மூலம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** நன்மையான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். வியாபாரிகளுக்கு விளம்பர யுத்திகளைக் கையாண்டு வாடிக்கையாளர்களைக் கவரும் விதத்தில் செயல்பட்டு லாபம் அதிகரிக்க வாய்ப்பு உருவா கும்.

**ரிஷபம்** சஞ்சலமான நாள். பொருளாதாரம் நலிவடையும். உடல்நிலை பாதிப்படையும். மனதில் குழப்பநிலை காணப்படும். அரசாங்கப் பணிகளில் சிலகாரணங்களால் தேக்கநிலை காணப்படும்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதார நிலை சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாகும். வியாபாரம் ஓரளவுக்கு நடைபெறும். காணி சம்பந்தமான பிரச்சினைகள் பேசித் தீர்க்கும்படி அமையும்.

**கடகம்** நன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். எந்த முயற்சியும் நன்மையில் முடியும். பகையாய் இருந்த உறவினர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள்.

**சிம்மம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். உத்தியோகம் தேடுபவர்களுக்கு தகுந்த வேலை கிடைக்கும்.

**கன்னி** யோசனையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். போட்டி, பொறாமைகள் இருந்து வரும். புத்திரர்களால் சில சங்கடங்கள் வந்து சேரும்.

**துலாம்** மத்திமமான நாள். பொருளாதாரத்தில் வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். வாகனங்களில் கவனமாகச் செல்வது அவசியம். நிலையான தொழில் செய்வதில் சில சிரமங்கள் இருந்து வரும்.

**விருச்சிகம்** இனிமையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் நிலவும். பெண்களுக்கு சுயதொழிலில் நல்ல லாபம் கிட்டும். ஆடை, அணிமணி சேர்க்கை உண்டாகும்.

**தனுசு** அதிஷ்டமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் இனிய நல்லுறவு நிலவும். மேற்படிப்புக்கு முயற்சி செய்யும் மாணவர்களுக்கு வாய்ப்பு தேடிவரும்.

**மகரம்** கவலையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் குழப்பநிலை காணப்படும். உத்தியோகத்தர் பணியில் கடினமான வேலை செய்ய வேண்டி ஏற்படும்.

**கும்பம்** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். புதிய தொழில் முயற்சி நன்மை தரும். வியாபாரம் சம்பந்தமாக வெளியூர்ப்பயணம் செல்லவேண்டி வரும். நண்பர்கள் மூலம் சில காரியங்கள் நிறைவேறும்.

**மீனம்** சம்பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். உடல்நலக் குறைபாடுகள் உண்டாகும். தொழில் முன்னேற்றத்திற்காக பல வழிகளிலும் முயற்சி செய்வார்கள்.

**சந்திராட்டம நாள்: கார்த்திகை 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1ஆம், 2ஆம், பாதங்களில் பிற்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# கடற்படை அதிகாரிக்கு மீண்டும் இரு பிடியாணைகள்

## தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேர் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில்

வெள்ளை வானில் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேரது வழக்கு விசாரணையில் தலைமறைவாக உள்ள சந்தேக நபரான கடற்படையின் லெப்டினன் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சியை கைது செய்வதற்காக மீண்டும் இரண்டு பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டை நீதிமன்ற நீதிவான் லங்கா ஜயவர்தனவினால் இந்த சந்தேக நபருக்கு எதிராக திறந்த பிடியாணை மற்றும் சர்வதேச பிடியாணை என்பன நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் ஆட்சிக் காலமான 2008, 2009 ஆம் ஆண்டுகளில் கொழும்பு கொட்டாஞ்சேனை மற்றும் தெஹிவளை பகுதிகளில் 5 மாணவர்கள் உட்பட 11 தமிழர் கள் வெள்ளை வானில் கடத்திச் சென்று காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை கொழும்பு கோட்டை நீதிமன்ற நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் முன்னிலைப் படுத்தப்பட்டபோது எதிர்வரும் 12ஆம் திகதிவரை தொடர்ந் தும் விளக்கமறியலில்வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணையில் கலந்துகொண்ட சாட்சிகள் சார்பிலான சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில் –

11 மாணவர்கள் காணாமல் ஆக்கப் பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதிமன்றத் தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேலதிக விசாரணை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கையில், கடற்படையில் இருந்த ஆனந்த குருகேயிடம் கடந்த 3 ஆம் திகதி வாக்கு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும், அதன்படி சந்தன பிரசாத் ஹெட்டியா ராச்சி என்ற சந்தேக நபர் கடற் படையில் சேவையிலிருந்த காலத்தில் தப்பிச்சென்றமை தொடர்பாக விசாரணை செய்யப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேக நபர் கடற்படைக்கு அறிவிக்காமல் சேவையிலிருந்து விலகித் தலைமறைவாகியுள்ளார் என வாக்கு மூலத்தில் கூறப்பட்டுள்ளது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு மன்றிற்கு அறிவித்தது. வழக்கு தொடர்பான மேலதிக விவரங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்ப தாக நீதிவான் தெரிவித்தார்.

மேலும் தலைமறைவாகியுள்ள சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சிக்கு எதிராக மீண்டும் திறந்த பிடியாணை மற்றும் சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்ட அதேவேளை, நேற்றுமுன்தினம் மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட இரண்டு சந்தேக நப ரையும் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும் படி நீதிவான் உத்தரவிட்டார் என்று தெரிவித்துள்ளார்.

# பிரதிஅமைச்சர் பைசால் காசிம் நியூஸிலாந்து தூதுக்குழுவுடன் சந்திப்பு!



கொழும்பு, ஏப். 07

நியுஸிலாந்து நாட்டின் சுகாதார துறை வணிக, வர்த்தக கம்பணிகளின் பிரதிநிதிகள் சுகாதார பிரதியமைச்சர் பைசால் காசிமை நேற்றுமுன்தினம் அவரது அமைச்சில் சந்தித்தனர்.

இதன்போது, மருந்துவகைகளுக்கான பார்க்கோட் முறைமை அவற்றினை கணினிமயப்படுத்துதல், நோயாளிகளை கணினி மூலம் பதிந்து அவர்களுக்கான கணினி அட்டை வழங்குதல் போன்ற வற்றை இலங்கையில் அறிமுகப்படுத்தி வைப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

# மானிய அடிப்படையில் நன்னீர் மீன்பிடி சங்கங்களுக்கு வலைகள்

யாழ்ப்பாணம், ஏப்.07

வடமாகாணத்தின் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்கும் வகையில், 50 வீத மானிய அடிப்படையில் நன்னீர் மீன்பிடி சங்கங்களுக்கு வலைகள் வழங்கப்படும்என்று மாகாண விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சு அறிவித்துள்ளது.

நன்னீர் மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் முகமாக எமது அமைச்சு ஊடாக மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஒவ்வொரு அளவு கொண்ட வலைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

இவ்வலைகள் தேவைப்படும் நன்னீர் மீனவ சங்கங்கள் அமைச்சின் 021 221 7340 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை-

**யாழ் பிரதேசத்தில்** - பிறவுண் வீதி, அரசடி வீதி ரயில் கடவையிலிருந்து தட்டார் தெரு சந்தி வரை, கே.கே.எஸ். வீதி நாச்சிமார் கோவிலிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடி சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதி சந்தியிருந்து ஸ்ரான்லி வீதிச் சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி வரை, ஆசாத் வீதி, பி.ஏ.தம்பி லேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப்புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன்பண்ணை வீதி, காதி அபூபக்கர் வீதி, சங்கானை, சண்டிலிப்பாய், தொட்டிலடி, பிரான்பற்று, பண்டத்தரிப்பு, கொடிகாமம் கச்சாய் வீதி பிரதேசம், அரசடி, சங்கத்தானை, மீசாலை, வங்களாவீதி, அல்லாரை, வெள்ளாம்போக்கட்டி, கெற்பேலி, கச்சாய், பாலாவி, கச்சாய் துறைமுகம், அம்மன் கோவிலடி, புத்தூர் சந்தி, இராமாவில், கொடிகாமம், நாவலடி, வரணி, கரம்பைக்குறிச்சி, வாழைத்தோட்டம், வேம்பிராய், மந்துவில், தாவளை, இயற்றாளை, கலைவாணி, மிருசுவில் வடக்கு, சுட்டிபுரம், ஹரிகரன் அச்சகம் பிறைவேற் லிமிரட், அண்ணாமலையான் சிறி இராகவேந்திரா என்ரபிறைசஸ் பிறைவேற்லிமிரட், வியாபார அபிவிருத்தி முகாமையாளர் பி.எல்.சி ஆகிய இடங்களிலும் -

**மன்னார் பிரதேசத்தில்** - தலைமன்னார்ப் பிரதேசம் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும்,-மின்விநியோகம்தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

காலைக்கதிர்
Kalaikkathir





# மன அழுத்தம் நோயிலிருந்து விடுபட முடியாத நிலையில் உலகில் பலர் வேதனை



# ஆரோக்கியமாக வாழ
## நாம் அனைவரும்
# கூட்டாகச் செயற்படுவோம்

இன்று உலக – நலவாழ்வுநாள் (World Health Day). இந்நாள் உலக சுகாதார அமைப்பின் அனுசரணையுடன்; ஆண்டுதோறும் ஏப்ரல்7 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. உலக மக்களின் சுகாதார நலன்களை மேம்படுத்தும் தூரநோக்குடன் ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு பிரிவான உலக சுகாதார அமைப்பு (World Health Organisation) 07.04.1948 இல் அமைக்கப்பட்டது. இதனால் உலகசுகா தாரதினம் இந்த நாளில் கொண்டாடப்படுகிறது. 1948 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உலக சுகாதார அமைப்பின் கூட்டம் ஒன்றில் உலக சுகாதார நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்க 1950 இல் இருந்து வருடம் தோறும் உலக சுகாதார நாள் கொண்டாடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. உலகின் உள்ள அனைவருக்கும் இயன்றவரை ஆகக்கூடுதலான பொதுச்சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதே உலக சுகாதார அமைப்பின் நோக்கமாகும். இதன் முக்கிய வேலைத்திட்டமாக தொற்று நோய் நொடிகளுடன் போராடுதலாகும்

உலகசுகாதார அமைப்பு (World Health Organisation) அனைத்துலக பொதுச் சுகாதாரத்திற்கான ஒருங்கிணைப்புப் பணிகளை செய்யும் அதிகாரம் படைத்தது. இவ்வமைப்பின் தலைமை அலுவலகம் சுவிற்ஸ்லாந்து நாட்டின்ஜெனீவாவில் அமைந்துள்ளது. உலக சுகாதார அமைப்பின் உருவாக்கமானது சம்பிரதாய பூர்வமாக 26 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டபடி உலக சுகாதார தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இவ்வமைப்பில் 193 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

முக்கியம் வாய்ந்த 2017 ஆண்டின் இத்தினக் கருப்பொருள்:

ஆண்டுதோறும், உலக சுகாதார நாள் மிக முக்கியமான ஒரு தலைப்புக்கு அர்ப்பணிக்கப் பட்டுள்ளது: சில ஆபத்தானநோய் தடுப்பு இதனுள் அடங்கும். இதன்படி 2017 ஆண்டின் – மனச்சோர்வு அல்லதுமனஅழுத்தம் – அது பற்றி நாம் பேசுவோம் என்னும் கருப்பொருள் முக்கியம் வாய்ந்ததாக பலரும் கருதுகின்றனர். மன அழுத்த நோய் இன்று முதலாளிகள், அரச, தனியார் ஊழியர்கள், ஆசிரியர்கள், உற்பத்தியாளர்கள், தனியாள்கள், உட்பட சமூகத்தில் உள்ள பல தரப்பட்ட மக்களையும் அழுத்தமாக தக்குகின்றது. மனித ஆரோக்கியம் ஒரு வருடம் உள்ள மதிப்பு மிக்க விடயம். அதற்கு எதனையும் ஒப்பிடமுடியாது. ஆரோக்கியமானநபர் ஒரு வலுவான தேசத்தை உருவாக்குகிறார் என்பார்கள். ஆனால் இன்று மனித குலத்தை எதிர்கொள்ளும் மிகவும் கடுமையான நோய் மனஅழுத்தம். இன்று மக்கள் பலர் தமதுஉயிரிலும் மேலாக நேசித்தவர்களால் ஏதோ ஒரு சில காரணங்களால் மனவேதனைகள் ஏற்பட்டு மனம்திறந்து கதைக்க விருப்பமின்மை



யால்மனஅழுத்தத்திற்கு ஆளாகி வாழ்வின் விளிம்புக்கு செல்லுகின்றார்கள். இதனால் உறவுகளின் முறிவு எற்படுகிறது. இது தொடர தொடர்ச்சியான உடல் நலக் குறைவு ஏற்பட்டு மன அழுத்த நோய் மேலும் அதிகமாகிறது.

இந்த மன அழுத்தம், நிலைத்த கவலையையும், மகிழ்ச்சி தரும் நடவடிக்கைகளில் நாட்டம் இழப்பதையும் இயல்புகளாகக் கொண்ட ஒரு நோய் ஆகும். இதனோடு, தொடர்ந்து, குறைந்த பட்சம் இரண்டு வாரங்கள் அல்லது அதற்கு மேலும் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமலும் போகும். பணியில், பள்ளியில் அல்லது வீட்டில் செயற்பட முடியாதவாறு செயல்திறனைப் பாதிக்கும். மனக்கலக்கம், மன ஓர்மை குறைவு, முடிவெடுக்க முடியாமை, அமைதி இன்மை, சுய மதிப்பு குறைதல், குற்ற உணர்வு, நம்பிக்கை இன்மை மற்றும் தனக்குத்தானேதீங்கு இழைத்துக் கொள்ளும். மேலும் மன அழுத்தம் தற்கொலைக்கும் வழிவகுக்கும். இதனால் உயிரை மாய்க்கும் அளவுக்குக் கூட போய் விடுகின்றார்கள். இதனைக் கருத்தில் கொண்டு தானோ தெரியவில்லை 2017 ஆண்டு மன அழுத்தத்தை குறைக்க வேண்டும் என்ற நோக்கோடு மனஅழுத்தம். நாம் பேசு வோம் என்ற கருப்பொருள் இத்தினத்திற்காக அறிவிக்கப்பட்டது.

### 8 லட்சம் பேர் வருடாந்தம் தற்கொலை

இந்தநோயின் அறிகுறியை பொறுத்து மிதமான மற்றும் தீவிரமான மன அழுத்தம் உண்டு என்று கூறுகிறார்கள். இன்று உலகில் 30 கோடி மக்கள் வயது, பாலின வேறுபாடு இல்லாமல் இந்த மன அழுத்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிறன தரவுகள். மன அழுத்த நோய் உடல் குறைபாடு நோய்களுக்கு இட்டுச் செல்கிறது. உலகில் அதிக நோய்களுக்குகாரணியாக மன அழுத்தம் உள்ளது. மன அழுத் தத்தின் உச்சக் கட்டமாக தற் கொலை முயற்சிக்கு தூண்டுகிறது. அது உயிரை மாய்க்கும் அளவுக்குச் செல்கிறது. உலகில் மன அழுத்த நோயால் ஒவ்வொரு ஆண்டும் 8 இலட்சம் மக்கள் தற்கொலை செய்துகொள்கின்றனர். மனஅழுத்தம் இரண்டு வகைப்படும்: ஒன்று நிகழ்வு மனத் தளர்ச்சி நோய், மற்றயது வெறி கொண்ட மனச்சிதைவு. நிகழ்வு மனத்தளர்ச்சி நோய்: இவ்வகையானவர்கள் எதிலும் விருப்பம் இல்லாதவர்களாகவும், குறைந்த சக்தி உள்ளவர்களாகவும், இரண்டு வாரங்களுக்கு மேல் இருப்பார்கள். பசியின்மை மற்றும் தூக்கமின்மை, ஒரு விடயம் குறித்து கவனமின்மை மற்றும் குற்றவுணர்வுடன் இருப்பார்கள். குறைந்த மனஅழுத்தநோய் உள்ளவர்கள் சாதாரண நோய் தொடரவும், சமூக விடயங்களில் ஆர்வம் இல்லாதவர்களாகவும் இருப்பார்கள்.

**வெறி கொண்ட மனச்சிதைவு:**

இவர்கள் சிலநேரங்களில் சாதாரண மனநிலையிலும் சில நேரங்களில் எரிச்சலானமனநிலை யிலும் இருப்பார்கள். அதிகமான செயல்பாடு, பேசுவதற்கான அழுத்தம், குறைந்த தூக்கம் ஆகியவை இதன் அறிகுறிகள்.

இதிலிருந்து விடுபட உணர்வுகளை நம்பிக்கையானவர்களிடம் பகிர்ந்து கொள்ளலாம். நலமுடன் இருந்த போது மகிழ்ச்சி அளித்த செயல்களை தொடர்ந்து செய்யலாம். குடும்பத்துடனும் நண்பர்களுடனும் நெருங்கியவர்களுடனும் தொடர்பில் இருக்கலாம். வல்லுநர் உதவியை நாடலாம் சரியான உதவியால் நலமடையலாம். தற்கொலை உணர்வு ஏற்பட்டால், யாராவது ஒருவருடைய உதவியை உடனடியாக நாடலாம். இவ்வாறு அறிவுரைகள் இருந்தாலும் மன அழுத்தத்திலிருந்து விடுபட முடியாது பலர் துடிக்கிறார்கள். அவர்களுக்கு உதவ வேண்டியதுஎமதுகடமையும் கூட. மன நோயாளியின் உறவை மேம்படுத்துவதும் கூட அந்நோய் குணமடைய ஒரு காரணியாகவும் அமையும். இதை உளப்பகுப்பாய்வின் தந்தை என்றழைக்கப்படும் 19 ஆம் நூற்றாண்டின் மனநல மருத்துவர் சிக்மண்ட் ஃபிராய்டு (Sigmund Freud) தெளிவாக விளக்கியுள்ளார் என்பதையும் நாம் அறிவோம்.

மனஅழுத்தத்திருந்து விடுபட்டு ஆரோக்கியமான இருக்க அனைவரது கவனத்தை ஈர்த்த உலகளாவிய ரீதியில் ஒவ்வொருவருக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் மன அழுத்த பிரச்சினைகளுக்கு கவனம் செலுத்துவதன் மூலம், உலக சுகாதார தினத்தில் ஒவ்வொருவரும் ஆரோக்கியத்துடனும் நலனுடனும் பாதுகாப்பாக இருக்க கூட்டாக நாம் செயற்படுவோம்.

“இன்று மக்கள் பலர் தமதுஉயிரிலும் மேலாக நேசித்தவர்களால் ஏதோ ஒரு சில காரணங்களால் மனவேதனைகள் ஏற்பட்டு மனம் திறந்து கதைக்க விருப்பமின்மை யால்மனஅழுத்தத்திற்கு ஆளாகி வாழ்வின் விளிம்புக்கு செல்லுகின்றார்கள். இதனால் உறவுகளின் முறிவு எற்படுகிறது. இது தொடர தொடர்ச்சியான உடல் நலக் குறைவு ஏற்பட்டு மன அழுத்த நோய் மேலும் அதிக மாகிறது.”

### 2018 ஆம் ஆண்டு உலக சுகாதார தினம் இலங்கையில்!

சமூக உட்கட்டமைப்புத் துறைகளில் இலங்கையின் சாதனைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் சுகாதாரநலக் குறிகாட்டி களானமகப் பேற்றுக் காலமரணம், சிசு மரண வீதங்கள் வாழ்நாள் எதிர்பார்ப்பு வீதம் என்பன ஆண்டாண்டுதோறும் வளர்சியடைந்து உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடத்தக்க மட்டத்தை அடைந்துள்ளது எனலாம். உலகளவில் பல நாடுகளை உலக சுகாதார நிறுவனம் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் இலங்கையும் இதில் அங்கத்துவ நாடு என்பது குறிப்பிடத்தக்கது. 2018 ஆம் ஆண்டுக்கான உலக சுகாதார தினம் உலகளாவிய சுகாதார பாதுகாப்பு என்ற தொனிப்பொருளில், இலங்கையில் நடைபெறவுள்ளது.

ஜெனீவாவில் நடைபெற்ற 142 உலக சுகாதார அமைப்பின் நிறை வேற்றுக் குழுக்கூட்டத்திலேயே, இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கை சுதந்திரம் அடைந்து 70 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டொக்டர் டெட்ராஸ் அதனோம் ஜிஹெப்ரேயெஸ் (Dr. Tedros Adhanom Ghebreyesus) வாழ்த்து தெரிவித்துள்ளார். மேலும், இலங்கை பொதுமக்களுக்கான இலவச சுகாதாரம் தொடர்பில் நீண்டகால வரலாற்றை கொண்டு இருப்பதாக தெரிவித்த அவர், இதனை நடத்து வதற்கு இவ்வருடம் இலங்கையே பொருத் தமான இடம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்று உலகளாவிய ரீதியில் மக்களின் ஆரோக்கியத்திற்கு அச் சுறுத்தலாகப் பல காரணிகள் விளங்குகின்றன. நவீனதொழில்நுட்பம் காரணமாக மக்கள் நுகரும் உணவு மற்றும் பாணங்கள் என்பன மாறுபட்டுள்ளதோடு இனந்தெரியாதபிணிகளும்வருகின்றன. பூலோக ரீதியில் சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட நோய்கள் புதிதாக பரவி வருவதை சுகாதார நிறுவனம் கூறுகின்றது.

எனவே தனி மனித சுத்த மதை தவறாமல் காத்திட, வீட்டின் சுத்தத்தை வீதியிலும் பெருக்கிட, சுத்தமில்லா இடந்தோறும் சுகாதாரம் பெருக்கிட, நாட்டை நலமாக்க நல்லதை விதைத்திட, காட்டின் மர வளங்களைக்கண்டிப்பாய் காத்திட, பசுமையின் போர்வையால் பாரினை மூடிட, நல்லதொரு குடி தண்ணீரை நலிந்தோர்க்கும் கொடுத்திட, சுற்றுப்புற தூய்மையைசுகமாக்கி வைத்திட, ஊட்டங்கள் நிறைவான உணவையே உண்டிட, வாட்டத்தை விலக்கிவிளையாட்டைக் விரும்பிட, பெற்றிடும் விழிப்பாலே பிணிகளை தடுத்திட, இயற்கை உறவோடு இசைவாக வாழ்ந்திட உயரும் சுகத்தாலே உலகையே நாம் மாற்றிடுவோம்.

**செல்வி சுபாஜினி குணரட்ணம்,**
(ஆசிரியர், யாழ் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

காலைக்கதிர் Kalaikkathir



# தாதித்தொழில் மகத்தானது


# பெண்கள் மதித்து அதில் ஈடுபடுவதற்கு முன்வரவேண்டும்

## முதலமைச்சர் விக்கி அறிவுரை



வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் ஆரம்ப சுகாதார சேவை நிலையங்களின் செயற்பாடுகள் சிறப்பாக காணப்படு கின்ற போதும் ஆரம்ப சுகாதார நிலை யங்களின் அளவுகள் குடிசனப் பரம்பலின் எண்ணிக்கைக் கேற்ப ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகவே காணப் படுகின்றன. இந்த நிலையில் கட்டப்பிராய் பகுதியில் ஆரம்ப சுகா தார நிலையம் ஒன்றின் தேவையை நன்கு உணர்ந்த ஊர்ப்பிரமுகரின் பரோப கார சிந்தனையின் அடிப் படையில் இந்நிலையத்தை அமைப்பதற்கான ஒரு காணித் துண்டை இலவசமாக சுகாதார அமைச்சுக்கு வழங்கியமை யைத் தொடர்ந்து வடமாகாணத்தின் மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதியி லிருந்து ரூபா 50 லட்சம் செலவில் புதிதாக அமைக்கப்பட்ட இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை வைபவரீதியாகத் திறந்து வைத்து உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.

கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகள் நலன்களைப் பேணு கின்ற நிலையங்களாக விளங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் பணிகள் திருப்திகரமாக அமைந்



திருக்கின்ற போதும் இந்த நிலை யங்களை நாடி தமது மருத்துவ பரிசோதனைகளையும் ஆலோ சனைகளையும் பெற்றுக்கொள்ளு கின்ற கர்ப்பிணித் தாய்மார்களின் பேரில் ஓர் அசமந்தப் போக்குக் காணப்பட்டுள்ளது. குழந்தைப் பேற்றுக்கு பின்னரான வைத்திய உதவிகளை பெறுபவர்களின் போக்கிலும் இதே நிலையே அவதா னிக்கப்பட்டுள்ளது. இவற்றின் காரணமாக முறையான சிகிச்சை கள் அவர்களுக்கு வழங்கப்பட முடியாது போய்விடுகின்றன என்று அறிகின்றேன். இந் நிலையங்களில் கடமை புரிகின்ற மருத்துவ மாதுக ளின் (Midwives) பணி மிகச் சிறப்பாக எடுத்துக் கூறப்படுகின் றது. ஆனால் அவர்களின் சேவையை முற்றாக எமது தாய்மார்கள் பயன் படுத்திக் கொள்கின்றார்களா என்பதில் ஐயம் இருக்கின்றது.

### மருத்துவ மாதுகளின் சிறப்பான சேவை

கர்ப்பிணித் தாயொருவர் தன் னைப் பதிவு செய்து கொண்ட தினத்திலிருந்து பிரசவத் திகதி வரையான காலப்பகுதியில் அவர் களுக்கான கால வரையறை சோத னைகள் கவனமாக முன்னெ டுக்கப் பட வேண்டும். பொதுவாகவே கருவுற்றிருக்குந் தாய்மாருக்கு ஏற்படக் கூடிய உயர் குருதி அழுத் தம்,குருதிச் சர்க்கரை வியாதி, முதிர்ச்சிக்கு முன்ப தான பிரசவம், வளரும் சிசுவின் நிலை, பாதுகாப் பான கர்ப்பம் தரித்திருத் தலை உறுதி செய்தல் போன்ற இன்னோரன்ன பரிசோதனைகள் மேற்கொள் ளப்படுவதற்கு இந்த நிலை யங்கள் பெரிதும் உதவுவன. ஏனைய பிர தேசங்களுடன் ஒப்பு நோக்கும் போது வட பகுதியில் சேவையாற்று கின்ற மருத்துவ மாதுகளின் சிறப்பான சேவைபற்றி பலரின் மெச்சுதல்களை நான் கேட்டிருக்கின்றேன். ஏனைய பிரதேசங்களில் மருத்துவ மாதின் இருப் பிடத்தைக் கண்டறிவதே சிரமமாக இருக்கின்றதென வும் ஆனால் நம் பகுதியில் உள்ள இந்த மருத்துவ உதவியா ளர்கள் வீடு வீடா கச் சென்று கர்ப் பிணித்தாய் மார்களதும் தாய்மார்களி னதும் நலன்களை அவதானிப் பதாகக் கேள்விப்படுகின்றேன்.

தற்செயலாக ஒரு கர்ப்பிணித் தாய் தன்னை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பதிவு செய்யாமல் இருப்பதாகத் தகவல்கள் கிடைக் கப்பெற்றால் உடனடியாக அவர் களின் வீடு தேடிச் சென்று ஆரம்ப சுகாதார நிலையத்தில் பதிவு செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதுடன் அவர்களுக் கான தொடர் மருத்துவ அவதானிப் புக்களையும் சேவைகளையும் வழங்குவதாகவும் அறிந்து கொண்டுள்ளேன்.

### தாதியர் பற்றாக்குறை

அவ்வாறு நிலைமை இருக் கையில் ஏன் எங்கள் இளம் பெண் கள் தாதியராகச் சேரப் பின்னிற் கின்றார்கள் என்று தெரியவில்லை. தற்போது தாதியர் பற்றாக்குறை வட மாகாணத்தில் நிலவுகின் றது. 50 இற்கு மேற்பட்ட தமிழ் மொழி தெரியாத தாதியர்கள் வட மாகாணத்திற்கு வெளியிலிருந்து இங்கு வருவிக்கப்பட்டுள்ளார் கள். எமது பெண்கள் தாதியத் தொழிலை மதித்து அதில் ஈடுபட முன்வர வேண்டும்.

இந்நிலையங்களுக்கு பிராந்திய சுகாதார சேவை மருத்துவ அதிகாரிகள் கால ஒழுங்கின் அடிப் படையில் விஜயம் செய்து கர்ப்பிணித்தாய்மார் மற்றும் குழந்தை களைப் பரிசோதனை செய்வ துடன் அவர்களுக்கு வழங் கப்படுகின்ற திரிபோசா சத்துணவுகளின் வழங் கல்களும் அவர்களால் உறுதிப்படுத்தப்படுகின் றன. ஆரோக்கியமான குழந்தைகள் பிரசவத் திற்கு ஆரம்ப சுகாதார நிலையங்களின் பணிகள் மிகவும் உறுதுணையா னது. நவீன மருத்துவ வசதிகளின் கீழ் பிறக்கும் குழந்தைகளைபோலியோ போன்ற நோய்த்தாக்கங் களில் இருந்து விடுபடச் செய்வ தற்கும் குழந்தைப் பேற்றுக்குமுன் பும் குழந்தைப் பேற்றின் பின்ன ரும் குழந்தைகளின் வளர்ச்சி வீதம் சீரானதாக அமைவது பற்றியும் இந்த நிலையங்கள் கூடிய கவனம் செலுத்தி வருகின்றன.

எனவே இன்று திறந்து வைக் கப்படுகின்ற இந்த நிலையத்தின் முழுமையான செயற்பாட்டை இப்பகுதியிலுள்ள மக்கள் குறிப்பாக கர்ப்பிணித் தாய்மாரும் குழந்தை களும் பிரசவித்த தாய்மார்களும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின் றேன். திரிபோசா போன்ற சத்து ணவுகள் இலவசமாக வழங்கப் படுகின்றமையால் அவை இலவசமாக வழங்கப்படுகின்ற கார ணத்தினால் அவை தரமற்றவை என்ற தவறான எண்ணம் எம்மி டையே எழக் கூடாது.

இந்த நிலையங்களில் வழங்கப் படுகின்ற ஒவ்வொரு சிகிச்சை களும் மற்றும் சத்துணவுகளும் உங்களதும் உங்கள் குழந்தைகளி னதும் எதிர்கால ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதன என்பதை நன்கு தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். அதை உணர்ந்து அதற்கேற்ப நீங்கள் செயற்படுதல் அவசியமா கும். இந்த நிலையத்தில் வைத்திய அதிகாரிக்கான அறை, மருத்துவ மாதுவிற்கான அறை, தடுப்பு ஊசி அறை, களஞ்சிய அறை, பொது மண்டபம் ஆகிய பகுதிகள் உள்ள டக்கப்பட்டுள்ளன. பிள்ளைகள் விளையாடக் கூடிய வகையில் முற்ற நிலப்பரப்பு டன் இந்தக் கட்



டடம் அமைந்திருப்பது மிகவும் சிறப்பானது.

எனவே இந்த ஆரம்ப சுகாதார நிலையம் இப் பகுதியில் உள்ள மக்களுக்கு சிறப் பான ஒரு சேவையை வழங்கக் கூடிய வகையில் அனைத்து வளங் களுடனும் சிறப் பாக அமைக்கப் பட்டிருக்கின்ற மையால் இதன் சேவைகள் முழு மையாகப் பொது மக்களுக்கு கிடைக்கும் எனத் தெரிவித்து எனது உரையைநிறைவு செய்கின்றேன்.

(இ)

யாழ். இருபாலை கட்டப்பிராய் ஆரம்ப சுகாதார நிலையத் திறப்பு விழா நிகழ்வில் வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம அதிதி உரையை ஆற்றியிருந்தார். அவரின் உரை இங்கு தரப்படுகிறது.

# முன்னாள் ராணுவ அதிகாரி சி.ஐ.டியினரால் கைதானார்



ஊடகவியலாளர் கீத் நோயரை கடத்திச் சென்று தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணசேகர குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

மூத்த ஊடகவியலாளர் கீத் நோயரை கடத்திச் சென்ற கும்பல் ஒன்று அவர் மீது தாக்குதல் நடத்தியிருந்தது. இந்தச் சம்பவம் 2008 ஆம் ஆண்டு நடைபெற்றது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குற்ற விசாரணைப் பிரிவினரால், இராணுவ மேஜர் உட்பட இராணுவப் புலனாய்வு உறுப்பினர்கள் 6 பேர் கைது செய்யப்பட் டனர்.

சந்தேகநபர்கள் 6 பேரும் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். எனினும் அவர்கள் 6 பேரையும் கொழும்பு மேல் நீதிமன்றம் பிணையில் விடுவித்தது.

இந்த நிலையில் முன்னாள் இராணுவ மேஜர் ஜெனரல் அமல் கருணசேகர குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். (ஐ)

# முல்லைத்தீவுப் போராட்டத்தில் அனைவரும் பங்கேற்கவேண்டும்

## சி.வீ.கே.சிவஞானம் வலியுறுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப் 07

முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் வடக்கு மாகாண சபையால் முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் சபையின் உறுப்பினர்கள் அனைவரும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டுமென்று அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்தார்.

முல்லையில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் ஆராயும் மாகாண சபையின் விசேட அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது சபையின் உறுப்பினர்கள் 38 பேரும் முல்லைத்தீவுக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிடுவதுடன் கவனவீர்ப்புப் போராட்டமொன்றையும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமையச் சபையின் உறுப்பினர்கள் அனைவரும் இதில் பங்கெடுக்க வேண்டும். ஏனெனில் மாகாண சபை முன்னெடுத்துள்ள இந்தச் செயற்பாடானது வெறுமனே பெயரளவிலானதாக இருப்பதல்லாமல் மிகவும் பிரயோசனமுடையதாக அமையவேண்டும். அதற்கமைய அனைத்து உறுப்பினர்களும் செயற்பட வேண்டிய அவசியம் இருக்கின்றது.

இதேவேளை, சபையில் நடைபெற்ற இந்த விசேட அமர் வின் ஆரம்பத்தில் இருந்த பலர் தேநீர் இடைவேளையின் பின்னர் சென்றுவிட்டனர். அதனால் கதிரைகள் பல வெறுமனே காணப்படுகின்றன. இங்கு ஒவ்வொருவரும் தாம் தாம் உரையாற்றி விட்டுச் சென்று விட்டனர். ஆகவே எதிர்வரும் 10 திகதியும் இப்படியிருக்காது உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளவேண்டும். என்றார். (ஐ-7)

# அரசாங்க அறிவித்தல்

## பகிரங்க ஏல விற்பனை – 2017

### மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

மாவட்டச் செயலகம், தகவல் தொழிநுட்ப பூங்கா மற்றும் கீழ்க் குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வளிபதனாக்கிகள், கணினிகள், பிரிண்டர்கள், ரயர்கள், போட்டோப்பிரதி இயந்திரங்கள், மின்சார உபகரணங்கள், கட்டடங்களிலிருந்து அகற்றப்பட்ட பொருள்கள் என்பன பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரசகளஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏலவிற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் வேலை நாளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 1.00 மணிவரை பொருள்களைப் பார்வையிடலாம். ஏல விற்பனையில் பொருள்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏல விற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது 172) பெற்று அன்றையதினம் மாலை 4.00 மணிக்கு முன்னர் பொருள்களை அவ்விடங்களில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

| இல | அலுவலகம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | பிரதேச செயலகம் - நெடுந்தீவு | 16.04.2018 திங்கட்கிழமை | மு.ப 11.00 | பி.செ நெடுந்தீவு |
| 02 | பிரதேச செயலகம் - கரவெட்டி | 16.04.2018 திங்கட்கிழமை | மு.ப 10.00 | பி.செ கரவெட்டி |
| 03 | பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம் | 17.04.2018 செவ்வாய்க்கிழமை | மு.ப 10.30 | பி.செ யாழ்ப்பாணம் |
| 04 | பிரதேச செயலகம் - கோப்பாய் | 19.04.2018 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ கோப்பாய் |
| 05 | பிரதேச செயலகம் - நல்லூர் | 19.04.2018 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ நல்லூர் |
| 06 | பிரதேச செயலகம் - ஊர்காவற்றுறை | 19.04.2018 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ ஊர்காவற்றுறை |
| 07 | பிரதேச செயலகம் - தெல்லிப்பளை | 19.04.2018 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ தெல்லிப்பளை |
| 08 | தகவல் தொழிநுட்ப பூங்கா - யாழ்ப்பாணம் | 19.04.2018 வியாழக்கிழமை | மு.ப 10.00 | தகவல் தொழிநுட்பபூங்கா,யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்ககட்டடம் |
| 09 | பிரதேச செயலகம் - பருத்தித்துறை | 19.04.2018 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ பருத்தித்துறை |
| 10 | பிரதேச செயலகம் - மருதங்கேணி | 19.04.2018 வியாழக்கிழமை | மு.ப 09.30 | பி.செ மருதங்கேணி |
| 11 | பிரதேச செயலகம் - உடுவில் | 19.04.2018 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ உடுவில் |
| 12 | பிரதேசசெயலகம் - காரைநகர் | 19.04.2018 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ காரைநகர் |
| 13 | பிரதேச செயலகம் - சங்கானை | 19.04.2018 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ சங்கானை |
| 14 | பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய் | 19.04.2018 வியாழக்கிழமை | மு.ப 10.30 | பி.செ சண்டிலிப்பாய் |
| 15 | பிரதேச செயலகம் - சாவகச்சேரி | 19.04.2018 வியாழக்கிழமை | மு.ப10.00 | பி.செ சாவகச்சேரி |
| 16 | பிரதேச செயலகம் - வேலணை | 19.04.2018 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ வேலணை |
| 17 | மாவட்டச் செயலகம்- யாழ்ப்பாணம் | 26.04.2018வியாழக்கிழமை | மு.ப. 09.30 | நாவற்குழிஅரச களஞ்சியசாலை |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்







சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாசாலையின் மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பாடசாலையின் அதிபர் மு.அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சபா.குகதாஸ் கலந்துகொண்டு மாணவர்களுக்கான சின்னத்தை அணிவித்து கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கினார். நிகழ்வில் பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளரும் நலன்விரும்பிகளும் கலந்து கொண்டனர். (இ)

# முன்னாள் போராளிகளுக்கு தகுதி இருந்தால் வேலை வாய்ப்பு

## வடக்கு, கிழக்கு போக்குவரத்து சபைகளில்



புனர்வாழ்வு வழங்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு தகுதி இருந்தால் இலங்கை போக்குவரத்து சபையின் மூலமாக வடக்கில் வேலைவாய்ப்புகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று, மோட்டார் வாகன சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளின் விவாதத்தின்போது உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார். கிழக்கு மாகாணத்தில் சாரதி, நடத்துநர் போன்ற நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் வடக்கைப் பொறுத்த வரையில் அதிக வெற்றிடங்கள் இல்லை. சாரதிக்குரிய வெற்றிடம் 40 நடத்துநர் வெற்றிடம் 40, பஸ் மெக்கானிக் வெற்றிடம் 38 ஆகியன உள்ளன.

இந்த வெற்றிடங்களுக்குப் புனர்வாழ்வு வழங்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளுக்கு வேலைகளை வழங்கவேண்டும். யுத்தத்தின் பின்னர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட போராளிகள் பலர் உள்ளனர். அவர்களில் திறமையான சாரதிகள் உள்ளனர். அவர்களை கருத்தில் கொண்டு ஜனநாயக ரீதியில் இணைந்து வாழ விரும்பும் எமது இளைஞர்களுக்கு வாய்ப்புக்களை வழங்க வேண்டும். என அவர் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க பதிலளிக்கையில் வடக்கு கிழக்கை பொறுத்தவரையில் அரசாங்கம் இலாபம் அடையும் பகுதியாக உள்ளது. குறிப்பாக இ.போ.ச டிப்போக்களில் 12 கோடி ரூபா அளவில் நிரந்தர வைப்புகள் உள்ளன. ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு நாம் எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கைகளை எடுப்போம். எனினும் மெக்கானிக்குகளை நாம் இணைத்துக் கொள்வதில்லை. மாறாக சாரதிகள், நடத்துநர்கள் வெற்றிடங்களுக்கு ஆள்களை இணைத்துக்கொள்ள முடியும். தகுதியானவர்கள் இருப்பார்கள் என்றால் உரிய காரியாலயங்களுக்கு விண்ணப்பிக்க வலியுறுத்துங்கள். இலங்கை போக்குவரத்து சபை தலைமைக் காரியாலயத்திற்கு விண்ணப்பிக்கும்படி கூறுங்கள்.

தகைமைக்கு அமைய நாம் அவர்களை இணைத்துக்கொள்கின்றோம். வாகன சாரதிகளாக 8 ஆம் தரம் சித்தி பெற்றிருந்தால் போதுமானது. 45 வயதிற்கு குறைவானவர்களாகவும் 5 ஆண்டுகள் அனுபவம் கொண்ட கனரக வாகனம் சாரதி அனுமதிப்பத்திரம் இருக்க வேண்டும். நடத்துநருக்கு கணக்குப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருந்தால் போதுமானது. அவ்வாறான நபர்கள் இருப்பின் எம் மிடம் அறிவியுங்கள். நாங்கள் உரிய நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுத் தருகின்றோம். ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபா வழங்கப்படும். இதர சலுகைகளும் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (உ)

## பூநகரிக் கோட்டையில் படையினரால் தமிழ், சிங்கள புதுவருட நிகழ்வுகள்








கிளிநொச்சி- பூநகரியில் உள்ள 66 ஆவது படைப் பிரிவினரின் ஏற்பாட்டில் அங்குள்ள கோட்டையில் தமிழ், சிங்கள புத்தாண்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன.


தமிழ்,சிங்களபுத்தாண்டை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி, முட்டியுடைத்தல், கயிறு இழுத்தல், கிறீஸ் மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, அபாயத்தில் நடந்து செல்லல் என பல போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன.

இந்த நிகழ்வில் மத குருமார்கள் கிளிநொச்சி படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் காரியகரவன, 66 ஆவது படைப்பிரிவு கட்டளைத் தளபதி மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## உடையார்கட்டுக் குளத்தில் இருந்து இயந்திரங்களை அகற்றிய ராணுவம்

முல்லைத்தீவு, ஏப்.07

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டுக் குளத்தில் பொருத்திய நீர் இறைக்கும் இயந்திரத் தொகுதிகளை இராணுவம் அகற்றியுள்ளது.



முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள உடையார்கட்டுக் குளத்தில் இருந்து படையினரின் முகாம் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்துக்கு நீர் எடுப்பது சட்டத்துக்கு முரணானதும் மக்களுக்கு குறிப்பாக விவசாயிகள் நன்னீர் மீன்பிடி தொழிலாளிகளுக்கு பாதிப்பானது எனவும் எனவே இதை உடனடியாக நிறுத்துமாறு கடந்த புதுக்குடியிருப்பு அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இதனை நிறுத்தி உபகரணங்களை அகற்ற உத்தரவிடப்பட்டு இராணுவத்தினர் சம்மதமும் வழங்கியிருந்தனர்.

இருப்பினும் அவை அகற்றப்படவில்லை. இதனால் அபிவிருத்திக் குழுவில் உறுதியளித்த தீர்மானத்தை நிறைவேற்றாது இராணுவம் உதாசீனம் செய்துள்ளது எனவும் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரியும் இல்லையேல் தாம் சிறுபோகத்தை கைவிடுவதாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக கடந்த 26 ஆம் திகதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக பல்வேறு பதாகைகளை தாங்கியவாறு பிரதேச அபிவிருத்திக் குழு தீர்மானத்தை நிறைவேற்றி உடனடியாக இயந்திரங்களை அகற்றுமாறும் கோரிக்கையை விடுத்திருந்தனர்.

இதனடிப்படையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளருக்கான மகஜரைத் திட்டமிடல் பணிப்பாளர் பெற்றுக் கொண்டார். வடக்கு மாகாண முதலமைச்சர், விவசாய அமைச்சர் ஆகியோருக்கான மகஜர்களையும் தனக்கான மகஜரையும் வடமாகாண உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் பெற்றுக் கொண்டார்.

இந்த நிலையில், நீர்இறைக்கும்இயந்திரத்தொகுதிகளை இராணுவத்தினர் அகற்றியுள்ளனர். (க)

## ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு சட்டநாதர் வீதி கொன்றையடி திருவருள் மிகு பைரவப் பெருமான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பரத் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தேர்த்திரு விழாவும், 17 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தீர்த் தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

திருவிழா ஆரம்ப நாளான 8 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை - நாளாந்தம் இரவு 7 மணி முதல் 7.30 மணி வரை சிறப்புச்சொற்பொழி வுகளும் இடம்பெறும்.

★ ★ ★

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

மஹோற்சவம் பத்து தினங்கள் நடைபெறவுள்ளதுடன் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை புத்தாண்டு தினத்தன்று முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்குத் தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

## வினாத்தாள் 26 பகுதி II இன் தொடர்ச்சி...

29)காந்தம் ஒன்றில் கவரும் தன்மை கூடுதலாக இருப்பது

1.வடமுனை

2.தென்முனை

3.மத்தியபகுதி

4.வடமுனைவும் தென்முனைவும்

30)மின்குமிழ் உள்ளே காணப்படும் இழை

1.தங்குதன் இழை

2.செப்புக்கம்பிச்சுருள்

3.அலுமினியச்சுருள் இழை

4.இரும்பு கம்பிச்சுருள் இழை

31)நீரைச் சுத்தமாக்க பயன்படுத்தும் இரசாயனப்பொருள்

1.சல்பர்

2.குளோரின்

3. சோடியம்

4.பொட்டாசியம்

32)இலங்கையிலுள்ள இயற்கைத் துறைமுகம்

1.காலி

2.கொழும்பு

3.திருகோணமலை

4.கண்டி

33)அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்

1.ஸ்கேவி

2.மலேரியா

3.டெங்கு

4.கண்டமாலை





## வினாத்தாள் 26 பகுதி II இன் தொடர்ச்சி...

17)தண்டுகோதிப் புழுவினால் தாக்கப்படும் தாவரம்

1.கத்தரி

2.குரக்கன்

3.நெல்

4.புடோல்

18)வெள்ளைநிறப்பூ அல்லாத தாவரம்

1. கங்குன்

2. புடோல்

3. வெண்டி

4. அகத்தி

19)பின்வரும் தாவர இலைகளில் அளவில் பெரியது

1.பொன்னாங்காணி

2.வல்லாரை

3.முருங்கை

4.அகத்தி

20)கஸ்பர் வீல் பயன்படுத்தாத உபகரணமாவது

1.நோயாளர் தள்ளுவண்டி

2.தையல் இயந்திரம்

3.குளிர்சாதனப்பெட்டி

4.சைக்கிள் வண்டி

21)சீனாவின் பெல்ஜியம ஒலிம்பிக் நிகழ்ச்சியின் சின்னம்

1.காட்டுக்கோழி

2.பண்டா

3.கங்காரு

4.மயில்

22)போமலின் இடப்பட்ட மீனை உண்பதால் ஏற்படும் விளைவு

1.வயிற்று வலி

2.உடலில் தடிப்புதோன்றும்

3.உடலில் சொறிஏற்படும்

4.உதடுகள் வீங்குதல்

23)அலங்காரத் தையல் வகையில் அடங்குவது

1.கம்பளித்தையல்

2.பெருநூலோடி

3.சோம்புத்தையல்

4.சிறுநூலோடி

24)இலங்கையில் அமைந்துள்ள இயற்கை நீர்வீழ்ச்சி ஒன்றல்லாதது

1.துன்கிந்த

2.லக்சபான

3.பம்பரகந்த

4.விக்டோரியா





25)ஊசித்துளைக் கமராவில் தோன்றும் விம்பம்

1.உருச்சிறுத்த நேரானவிம்பம்

2.உருச்சிறுத்த தலைகீழானவிம்பம்

3.உருப்பெருத்த தலைக்கீழானவிம்பம்

4.உருப்பெருத்த நேரான விம்பம்

26)சூழல் நேயமான பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவியமாக பயன்படுத்தப்படும் வித்து ?

1.எள்ளு

2.ஆமணக்கு

3.வேம்பு

4.இலுப்பை

27)நீலம், சிவப்பு ஆகிய நிறங்களைக் கலப்பதால் பெறப்படும் நிறம்

1.கபிலம்

2.செம்மஞ்சள்

3.பச்சை

4.ஊதா

28)2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெற உள்ள நாடு எது?

1.பிரேசில்

2.சீனா

3.ஜப்பான்

4.இலங்கை

## 3 லட்சம் கோடி ரூபா வரி உயர்வு:

# வலுக்கிறது அமெ. - சீனா வர்த்தகப் போர்

வொஷிங்டன், ஏப். 07

அமெரிக்கா-சீனா இருநாடுகளும் தலா 3 லட்சம் கோடி ரூபா அளவுக்குப் பொருள்கள் மீதான வரி விதித்தது. இதன் மூலம் இரு நாடுகளின் வர்த்தகப் போர் வலுக்கிறது.

சீனா மீது அமெரிக்கா ஒரு குற்றச்சாட்டை நீண்ட காலமாக முன்வைத்து வருகிறது. அது, அமெரிக்காவின் அறிவுசார் சொத்துக்களை சீனா திருடுகிறது, அது மட்டுமின்றி அமெரிக்காவின் தொழில் நுட்பங்களை சீனா தன் நாட்டுக்கு மாற்றிக்கொண்டு வருகிறது என்பது ஆகும்.

இந்தக் குற்றச்சாட்டை சீனா நிராகரித்தபோதும், அமெரிக்கா லேசாக விட்டு விடவில்லை. அந்த நாட்டின் மீது, அதிரடி நடவடிக்கையில் இறங்கியது. சீனாவில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யக்கூடிய அலுமினி



யத்துக்கு 25 வீதமும், உருக்குக்கு 10 வீதமும் வரி விதித்து ட்ரம்ப் நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டது.

இதற்குச் சீனாவும், அமெரிக்காவுக்கு பதிலடி கொடுத்தது. அமெரிக்காவில் இருந்து சீனாவில் இறக்குமதி செய்யப்படும் மாமிசம், பழங்கள், பன்றி இறைச்சி ஆகியவை உட்பட 128 பொருள்களுக்கு 300 கோடி டொலர் அளவுக்கு ஜின்பிங் நிர்வாகம் வரி விதித்தது.

இந்த நடவடிக்கை அமெரிக்காவை அதிர வைத்தது.

இந்த நிலையில் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஆயிரத்து 300 பொருள்களுக்கு 25 வீதம் வரை வரி உயர்த்தி அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகம் பட்டியல் வெளியிட்டுள்ளது. 5000 கோடி டொலர் அளவுக்கு இந்த வரி உயர்வு அமைந்துள்ளது.

அமெரிக்காவுடன் பேச்சு நடத்துவதற்கு திறந்த மனதுடன் இருக்கிறோம்; அதே நேரத்தில் வர்த்தகப் போர் வந்தால் இறுதிவரை போரிடுவோம் என்று சீனா அறிவித்து உள்ள நிலையில் இந்த வரி உயர்வு நடவடிக்கையை அமெரிக்கா எடுத்துள்ளது.

அமெரிக்கா-சீனா வர்த்தகப் போர் வலுப்பது உலக நாடுகளை அதிர வைத்து உள்ளது.

## 50 ஆண்டுகளுக்குப் பின்னர் இணையும் அமெரிக்க ஜோடி



அமெரிக்காவில் விவாகரத்தாகி 50 ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் பேரன், பேர்த்திகள் முன்னிலையில் ஒருதம்பதி திருமணம் செய்துகொள்ள முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவின் கெண்டகி மாகாணத்தைச் சேர்ந்தவர் ஹரால்ட் ஹோலண்ட் (வயது - 83). இவருக்கும் லில்லியன் பார்ன்ஸ் (வயது - 78) என்பவருக்கும் கடந்த 1955 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது.

ஐந்து குழந்தைகளைப் பெற்று சந்தோசமாக வாழ்ந்து வந்த இந்தத் தம்பதி, கடந்த 1967ஆம் ஆண்டு கருத்துவேறுபாடு காரணமாக பிரிந்தது. சட்டபூர்வமாக விவாக ரத்து பெற்ற இவர்கள், தனித்தனியே மறுமணமும் செய்துகொண்டனர்.

இருவருமே கடந்த 2015ஆம் ஆண்டு தங்கள் துணைகளை இழந்தனர். மகன், மகள்கள் திருமணமாகி சென்றதையடுத்து இருவரும் தனிமையில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் இருவருக்கும் ஒரு துணை தேவைப்பட்டது. எனவே, அவர்கள் மீண்டும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளனர்.

இதுதொடர்பாக தங்கள் விருப்பத்தை இரு குடும்பத்தினரிடமும் தெரிவித்து திருமணத்திற்கு அனுமதி பெற்றனர். இதையடுத்து வரும் 14 ஆம் திகதி அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்க அவர்களது குடும்பத்தார் திட்டமிட்டுள்ளனர்.

## நலமுடன் இருக்கிறார் இங்கிலாந்து இளவரசர்



### பக்கிங்ஹாம் அரண்மனை அறிவிப்பு

லண்டன், ஏப். 07

இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் கணவர் இளவரசர் பிலிப்புக்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு நலமுடன் உள்ளார் என பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவர் இளவரசர் பிலிப் (வயது - 96).

கடந்த சில வாரங்களாக இவர் இடுப்பு வலியால் அவதிப்பட்டு வந்தார். இதனால் அவருக்கு இடுப்புப் பகுதியில் அறுவைச் சிகிச்சை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதையடுத்து, பிலிப் நேற்றுமுன்தினம் கிங் எட்வர்ட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதுதொடர்பாக அரண்மனையின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

கடந்த சில தினங்களாக இடுப்பு வலியால் அவதிப்பட்டு வந்த இளவரசர் பிலிப்புக்கு நேற்று இடுப்பு பகுதியில் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டது. இதையடுத்து, அவர் நலமுடன் உள்ளார். விரைவில் அரண்மனை திரும்புவார் எனத் தெரிவித்துள்ளார்.

## துருக்கிப் பல்கலையில் மாணவர் வெறியாட்டம்

### துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பலி



அங்காரா, ஏப். 07

துருக்கியின் எஸ்கிசெஹிர் மாகாணத்தில் உள்ள ஒஸ்மான் காசி பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

துருக்கி நாட்டின் வடமேற்குப் பகுதியில் உள்ள எஸ்கிசெஹிர் மாகாணத்தில் ஒஸ்மான்காசி பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்தினுள் துப்பாக்கியுடன் நுழைந்த அந்தப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் அங்கிருந்தவர்களை நோக்கித் துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

இதில் அந்தப் பல்கலைக்கழகத்தின் துணைத்தலைவர், ஆசிரியர் செயலாளர், ஒரு விரிவுரையாளர் மற்றும் ஒரு பணியாளர் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மூன்று பேர் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

## சவுதியில் 40 ஆண்டுகளின் பின் தியேட்டர்கள் திறப்பு

டுபாய், ஏப். 07

சவுதி அரேபியா நாட்டில் 40 ஆண்டுகளுக்குப் பிறகு ஏப்ரல் 18 ஆம் திகதி முதல் திரையரங்குகள் செயற்படத் தொடங்கும் என அந் நாட்டு அரசு அறிவித்துள்ளது.

முக்கியமான அரபு நாடுகளில் ஒன்றான சவுதி அரேபியாவில் பல்வேறு கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கின்றன. இதில் பொது வெளியில் சினிமாவுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை முக்கியமானது. மதக் கட்டுப்பாடுகள் மீறப்படுவதாக கூறி கடந்த 1980 ஆண்டுகளின் தொடக்கத்தில் சினிமாவுக்கு சவுதி அரசு தடை விதித்தது.

ஆனால் தற்போது சவுதியின் பட்டத்து இளவரசராக இருக்கும் முகமது பின் சல்மான், நாட்டில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். குடிமக்களுக்கு விதிக்கப்பட்டு இருந்த பல்வேறு தடைகளை அவர் விலக்கி வருகிறார். இதில் முக்கியமாக, பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு விதிக்கப்பட்டு இருந்த தடையை விலக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து சுமார் 40 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முறையாக அந்த நாட்டில் சினிமாவுக்கும் அனுமதி வழங்க சவுதி அரசு முடிவு செய்தது.

இந்த நிலையில், சவுதி அரேபியா நாட்டில் 40 ஆண்டுகளுக்கு பிறகு ஏப்ரல் 18ஆம் திகதி முதல் தியேட்டர்கள் செயற்படத் தொடங்கும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

# மக்களின் ஊடுருவலைத் தடுப்பதற்கு மெக்சிக்கோ எல்லையில் இராணுவம்

### ட்ரம்ப் முடிவு

வொஷிங்டன், ஏப். 07

மெக்சிக்கோ எல்லையில் மக்களின் ஊடுருவலைத் தடுப்பதற்காக அப் பகுதியில் இராணுவத்தை நிறுத்த அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார்.

அமெரிக்காவை ஒட்டித் தென் பகுதியில் மெக்சிக்கோ நாடு உள்ளது. இங்கிருந்து பல்லாயிரக்கணக்கானோர் எல்லை தாண்டி வந்து அமெரிக்காவில் வசித்து வருகிறார்கள். இத



னால் அமெரிக்காவில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இந்த ஊடுருவலைத் தடுப்பதற்காக ஏற்கனவே மொத்தம் உள்ள 3145 கிலோ மீற்றர் எல்லையில் சில பகுதிகளில் தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் மீதி உள்ள தூரத்துக்கு தடுப்புச் சுவர் அமைக்கப்படும் என்று அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்து இருந்தார். இதற்கு மெக்சிக்கோ நாடு கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. அதையும் மீறி தடுப்புச் சுவர் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

அதற்கு முன்னதாக எல்லை முழுவதும் இராணுவத்தை நிறுத்த அதிபர் டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார்.

இதற்கு மெக்சிக்கோ நாடு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

# டிராக்டர் கால்வாயில் கவிழ்ந்து விபத்து

## 12 தொழிலாளர்கள் சாவு

ஐதராபாத்,ஏப்.07

தெலுங்கானா மாநிலத்தில் டிராக்டர் கால்வாயில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 12 விவசாய தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

தெலுங்கானா மாநிலம் நல்கொண்டா மாவட்டத்தில் நேற்று விவசாயக்கூலித்தொழிலாளர்கள் சுமார் 30 பேர் டிராக்டரில் வேலைக்குச் சென்றுகொண்டிருந்தனர். வட்டிபட்லா கிராமத்தின் அருகே சென்றபோது, டிராக்டர் நிலைதடுமாறி வீதியோர கால்வாயில் விழுந்து விபத்துக்குள்ளானது. கால்வாயில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியதால் தொழிலாளர்கள் தண்ணீரில் மூழ்கினர்.

இதுபற்றி தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து, உள்ளூர் மக்களுடன் இணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். 12 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. மேலும் சிலர் தண்ணீரில் மூழ்கி இறந்திருக்கலாம்எனஅஞ்சப்படுகிறது. மீட்புப் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.



# மக்கள் நீதி மய்யம் கட்சியினுடைய கொள்கைகளை வெளியிட்ட கமல்

திருச்சி,ஏப்.07

மக்கள் நீதி மய்யத்தின் கொள்கைகள் என்ன என்பதை திருச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கமல் ஹாசன் வெளியிட்டுள்ளார்.

திருச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கமல்ஹாசன் பேசும்போது கூறியவை வருமாறு-



மக்கள் நீதி மய்யத்தின் கொள்கை என்ன என்று கேட்கிறார்கள். மக்கள் நலம் தான் எங்கள் கொள்கை என ஏற்கனவே கூறி இருக்கிறேன். ஆனாலும் திரும்பத் திரும்ப அதனையே கேட்கிறார்கள்.

அதனால் மய்யத்தின் கொள்கைகளை இங்கே விரிவாக அறிவிக்கிறேன். கர்நாடகத்திடம் இருந்து பெறவேண்டிய காவிரி நீரைநாம் பெற்றேதீரவேண்டும். அது நமது உரிமை. இதேபோல் மற்ற மாநிலங்களிலும் இருந்து பெறவேண்டிய நீரையும் பெற நடவடிக்கை எடுப்போம்.

மற்ற மாநிலங்களை விடத் தமிழகத்தில் மழை அதிக அளவில் பெய்கிறது. அதனை வீணாக்காமல் சிறு சிறு அணைகள் கட்டி சேமிப்போம். சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் திட்ட முறைகளை கொண்டு வருவோம். மண்ணின் தன்மை பற்றி ஆராய நில வள மருத்துவர்களை நியமிப்போம். அவர்களால் தான் மண்ணின் தன்மை பற்றி ஆராய்ந்து விவசாயிகளுக்கு சாகுபடி பற்றிய நல்ல அறிவுரைகளை வழங்க முடியும்.

தமிழகத்தில் தற்போது 50 வீதத்திற்கும் மேற்பட்ட பெண்கள் ரத்தசோகை நோயால் பாதிக்கப்பட்டு உள்ளனர். 30 வீத பெண்கள் போதுமான உணவு, உடற்பயிற்சி இன்றி அதிக உடல் எடையால் அவதிப்படுகிறார்கள். இது ஆண்களுக்கும் பொருந்தும். பெண்கள் தங்களது உடல் நலத்தை பேணுவதற்காக அவர்கள் விரும்பும் இடத்தில் உடற்பயிற்சி செய்வதற்கான பாதுகாப்பு திட்டங்கள் ஏற்பாடு செய்யப்படும்.

காவல் நிலையங்களை நேர்மையாகச் செயல்பட வைப்போம், தமிழக காவல் துறை சிறப்பான காவல் துறை தான்.

ஊழல் ஒழிப்பு தான் எங்கள் முதல் வேலை. தமிழகத்தின் அனைத்து துறைகளிலும் ஊழல் இருக்கிறது. மக்கள் நீதி மய்யம் ஆட்சி அமைத்தால் எனது முதல் கையெழுத்து லோக் ஆயுக்தா அமைக்கும் பிரேரணைக் குத்தான். அந்த அமைப்பை ஏற்படுத்தினால் தான் நான் உட்பட யார் ஊழல் செய்தாலும் கண்காணிக்க முடியும். வாக்குக்காக யாரிடமும் காசு வாங்காதீர்கள். செலவுக்காக நீங்கள் வாங்கும் காசு உங்களுக்கு இடப்படும் கைவிலங்கு என்பதை உணருங்கள்.

எங்கள் கட்சியின் கொள்கைகளை கூறி விட்டேன். இனியும் உங்கள் கொள்கை என்ன எனக் கேட்காதீர்கள். எங்கள் கொள்கைகளை கேட்டு ஆட்சியில் இருப்பவர்களுக்கு தொடை நடுங்குகிறது என்று தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் என்பதாலே சல்மானுக்கு சிறையாம்

## பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் கூறுகிறார்

இஸ்லாமாபாத்,ஏப். 07

முஸ்லிம் என்பதாலே சல்மான் கான் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்று பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் காவ்ஜா ஆசிப் தெரிவித்துள்ளார்.

பொலிவுட் திரையுலகில் முன்னணி நடிகராக விளங்கி வரும் சல்மான் கான், 'ஹம் சாத் சாத் ஹெயின்' என்ற இந்திப் படத்தில் நடிப்பதற்காக கடந்த 1998 ஆம் ஆண்டு ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் சென்றிருந்தார்.

அங்கு அரிய வகை மான்களை வேட்டையாடினார் எனக் குற்றம்சாட்டப்பட்டார். ஏறத்தாழ 20 ஆண்டுகள் நடைபெற்ற இந்த வழக்கில், நேற்று முன்தினம் தீர்ப்பளித்த ஜோத்பூர் நீதிமன்றம், சல்மான்கானுக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது. இதையடுத்து, ஜோத்பூர் மத்திய சிறையில் சல்மான் கான் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், பாகிஸ்தான் தொலைக்காட்சி ஒன்றிற்குபேட்டியளித்த காவ்ஜா ஆசிப் கூறுகையில் –

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்பதாலே சல்மான் கானுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

20 ஆண்டுகளுக்கு முந்தைய வழக்கில் சல்மான் கானுக்கு தண்டனை விதிக்கப்படுகின்றமையைப் பார்க்கும் போது, முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு இந் தியாவில் மதிப்பு இல்லை என்பதை காட்டுகிறது என்று தெரிவித்துள்ளார்.

# இறந்த தாயாரின் உடலைப் பதப்படுத்தி 3 ஆண்டுகளாக ஓய்வூதியம் பெற்ற மகன்

கொல்கத்தா,ஏப்.07

கொல்கத்தாவில் இறந்த தாயாரின் உடலைப் பதப்படுத்தி அவரது கைரேகையை பயன்படுத்தி 3 ஆண்டுகளாக ஓய்வூதியம் பெற்றுவந்த மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் சுபாபிரதா மஜூம்தார் என்பவரின் தாயார் பினா உடல் நலக்குறைவால் கடந்த 2015 ஆம் ஆண்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மரணமடைந்தார். பினா மஜூம்தார் ஓய்வு பெற்ற அரசு ஊழியர் ஆவார். அவருக்கு பென்சன் வந்துள்ளது.

பினா மரணமடைந்ததைத் தொடர்ந்து அவரது உடலை வீட்டுக்கு கொண்டு வந்த மகன் தாய் இறந்ததை வெளியே யாருக்கும் தெரிவிக்கவில்லை. பல்வேறு இரசாயன கலவைகளைப் பயன்படுத்தி தாயாரின் உடலைப் பதப்படுத்தி வைத்து உள்ளார். அத்துடன் அவருடைய கைரேகையை பயன்படுத்தி மாதம் மாதம் ஓய்வூதியத்தையும் பெற்று வந்துள்ளார்.

சமீபத்தில் பொலிஸார் சுபாபிரதா வீட்டில் சோதனை நடத்தி தாயார் பினாவின் உடலைக் கைப்பற்றி உள்ளனர். பினா உடலில் இருந்து முக்கிய பாகங்களை எடுத்து விட்டு சுபாபிரதா அந்த உடலை மம்மி போல் பதப்படுத்தி வைத்து இருந்தார்.

இது தொடர்பாக பொலிஸார் மகன் மற்றும் தந்தையை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து கோரி, சந்திரபாபு நாயுடு சைக்கிள் பேரணி



அமராவதி,ஏப்.07

ஆந்திர மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து கோரி முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்றுத் தலைமைச் செயலகம் நோக்கி சைக்கிள் பேரணி தொடங்கினார்.

ஆந்திர மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்க வேண்டும் என முதல்வர் சந்திரபாபு நாயுடு மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். ஆனால் மத்திய அரசு அதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை. எனவே, ஆளும் தெலுங்கு தேசம் கட்சி எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்தும் மத்திய அரசில் இருந்தும் தெலுங்கு தேசம் கட்சி விலகியது.

இந்த நிலையில், மத்திய அரசுக்கு எதிரான போராட்டத்தை தீவிரப்படுத்தும் வகையில் முதல்வர் சந்திரபாபு நாயுடு சைக்கிள் பேரணியைத் தொடங்கினார்.

பேரணியில் தெலுங்குதேசம் கட்சி எம்.எல்.ஏக்கள், எம்.எல்.சிக்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்தப் பேரணியின்போது, ஆந்திர மாநிலம் பிரிக்கப்பட்ட போது தேசிய ஜனநாயக கூட்டணி அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டது

## போலி வெடிகுண்டை உடலில் கட்டி

# வங்கியை கொள்ளையிட முயன்று மாட்டிய நபர்



உத்தரப்பிரதேச மாநிலத்தில் பண நெருக்கடியில் சிக்கிய நபர் போலி வெடி குண்டுகளை உடலில் கட்டி வங்கியை கொள்ளையடிக்க வந்து பொலிஸில் சிக்கிக்கொண்டுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் பிஜ்னோர் மாவட்டத்தில் உள்ள சாந்த்பூரில் எச்.டி.எவ்.சி வங்கி உள்ளது. இந்த நிலையில், நேற்று இடுப்பில் போலியான வெடிகுண்டுகளை கட்டி வங்கிக்குள் நுழைந்த நபர் வங்கியை கொள்ளையடிக்கப்போகிறேன் என மிரட்டியுள்ளார்.

இதனை அடுத்து, அங்குள்ள வங்கி பணியாளர்கள் அவரை லாவகமாகப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர். பண நெருக்கடி காரணமாக என்ன செய்வதென்று தெரியாமல் இப்படி செய்து விட்டேன் என்று விசாரணையில் அந்த நபர் தெரிவித்துள்ளார். பிடிபட்ட நபர் மன நிலை சரியில்லாதவர் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

# இம்முறை ஐ.பி.எல். சவாலாக அமையும் – மஹேல



இம்முறை ஐ.பி.எல் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் றோயல்ஸ் ஆகிய அணிகள் மீண்டும் திரும்பியுள்ளமையால் நடப்புச் சம்பியனாக கிண்ணத்தை தக்கவைப்பது தமக்கு கடினம் எனவும், இம்முறை ஐ.பி.எல் தொடரில் தமது அணி கடினமாக சவால்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் மஹேல ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

11ஆவது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் இன்று மும்பையில் ஆரம்பமாகவுள்ளது. இதில் நடப்புச் சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணியுடன் முன்னாள் சம்பியனும், 2 ஆண்டுகள் போட்டித் தடைக்குப் பின்னர் மீண்டும் களமிறங்கவுள்ள தரப்பினருமான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

இந்த நிலையில், மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளரும் இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர ஜாம்பவானுமான மஹேல ஜயவர்தன மற்றும் அதன் தலைவர் ரோஹித் சர்மா பங்கேற்ற விசேட செய்தியாளர் சந்திப்பொன்று நேற்று முன் தினம் மும்பையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு மஹேல கருத்து வெளியிடுகையில் –

கடந்த வருடம் நாம் சம்பியனாக முடிசூடிக் கொண்டாலும், இம்முறை போட்டித் தொடரில் அதனை மீண்டும் தக்கவைத்துக்கொள்வது கடினம் என்றே சொல்லாம். எந்த அணி சம்பியன் பட்டத்தை வெல்லும் என்பதை ஊகித்துக் கூற முடியாது உள்ளது.

அதிலும், இம்முறை போட்டித் தொடரில் அனைத்து அணிகளும் பலம் வாய்ந்த நிலையில் களமிறங் கவுள்ளன. எனவே, போட்டித் தொடரை வெல்வதற்கு ஒவ்வொரு போட்டியிலும் சிறப்பாக விளையாட வேண்டும். ராஜஸ்தான், டெல்லி மற்றும் பஞ்சாப் ஆகிய அணிகளில் பல புதுமுக வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். எனவே, அந்த அணிகளுடன் விளையாடுவது மிகப்பெரிய சவாலாக அமையும் எனத் தெரிவித்துள்ளார்.

# ஐ.பி.எல். போட்டியை பின் தள்ளும் பி.எஸ்.எல்

இந்தியாவில் நடக்கும் ஐ.பி.எல். போட்டியில் விளையாட என்னை அழைத்தால் கூட நான் விளையாடமாட்டேன் என்று பாகிஸ்தான் முன்னாள் வீரர் ஷாகித் அப்ரிடி கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். முதன்முதலில் தொடங்கும் போது டெக்கான் சார்ஜர்க்ஸ் அணியில் இடம் பெற்றி ருந்த அப்ரிடி அப்போது ஐ.பி.எல். போட்டியைப் புகழ்ந்து தள்ளினார். அப்போது அவர் கூறுகை யில்,

'ஐ.பி.எல். தொடரில் நான் விளையாடிய அனு பவத்தை என்னால் மறக்க முடியாது. மிகச்சிறந்த அனுபவம். மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கிரிக்கெட் போட்டித் தொடர் ஐ.பி.எல். என்பதில் மாற்றுக்கருத்தில்லை. எனக்கு கிடைத்த மிகச் சிறந்த அனுபவம்' என்று புகழ்ந்திருந்தார்.


இப்போது, பல்டி அடித்து ஐ.பி.எல். போட்டியில் விளையாடமாட்டேன் என அப்ரிடி தெரிவித் துள்ளார்.

ஏற்கெனவே, காஷ்மீர் விவகாரம் தொடர்பாக சர்ச்சைக்குரிய வகையில் அப்ரிடி கடந்த சில நாள்களுக்கு முன் கருத்துத் தெரிவித்திருந்தார். அவருக்கு முன்னாள் கிரிக்கெட் வீரர் கபில்தேவ், கவுதம் கம்பீர், கப்டன் விராட் கோஹ்லி, ரெய்னா ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்து, பதிலடி கொடுத்தனர். அந்தப் பரபரப்பு அடங்குவதற்குள் எரியும் தீயில் நெய் வார்த்தது போல், மீண்டும் அடுத்த கருத்தை அப்ரிடி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் இருந்து ஒளிபரப்பாகும் ஒரு செய்தி சனலுக்கு அப்ரிடி நேற்று பேட்டி அளித் திருந்தார்.

பாகிஸ்தான் சூப்பர் லீக் போட்டி, இந்தியாவில் நடக்கும் ஐ.பி.எல். போட்டியைக் காட்டிலும் எதிர்காலத்தில் மிகப்பெரியதாக உருவாகும். ஐ.பி.எல். போட்டி நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் என்னை விளையாட அழைத்தால் கூட நான் ஐ.பி.எல். போட்டிக்கு வரமாட்டேன். எங்கள் நாட் டில் நடக்கும் பி.எஸ்.எல். போட்டிதான் மிகப் பெரியது, விரைவில், ஐ.பி.எல். போட்டியை எங்க ளுடைய பி.எஸ்.எல். போட்டி பின்னுக்குத் தள்ளும்.

இப்போதுள்ள நிலையில் நான் பி.எஸ்.எல். போட்டியில் விளையாடுவதைத்தான் விரும்புகி றேன். ஐ.பி.எல். போட்டி எனக்குத் தேவையில்லை. அதில் விளையாடவும் ஆசையில்லை, ஒரு போதும் ஆசைப்பட்டதும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.


ஷாகித் அப்ரிடி



# பெண்கள் ஹொக்கி: கானாவை 12:0 என துவம்சம் செய்த நியூஸி.

பொதுநலவாயப் பெண்கள் ஹொக்கிப் போட்டியில் அறிமுக அணியான கானாவை 12:0 எனத் துவம்சம் செய்தது நியூஸிலாந்து.

பொதுநலவாய போட்டி பெண்கள் ஹொக்கியில் நியூஸிலாந்து அணி நேற்று கானாவை எதிர்கொண்டது. முதன்முறையாக கானா பொதுநலவாயப் போட்டியில் பங்கேற்கிறது. அனுபவம் இல்லாத கானாவை நியூஸிலாந்து பெண்கள் அணி துவம்சம் செய்தது.

அந்த அணி வீராங்கனைகள் கோல் மழை பொழிய 12:0 எனக் கானாவை துவம்சம் செய்தது. 18 வயது இளம் வீராங்கனையான மேடிசன் தோயர் ஹட்ரிக் கோல் அடித்தார். நியூஸிலாந்து தொடக்க ஆட்டத்தில் ஸ்கொட்லாந்தை 6:1 என வீழ்த்தியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

நியூஸிலாந்து அடுத்து கனடா, ஆஸ்திரேலியா அணிகளை எதிர்கொள்ளவுள்ளது.



# ரபாடா விலகினார்: டில்லி டேர் டெவில்ஸுக்குப் பின்னடைவு


ஐ.பி.எல். 2018இன் முக்கிய வீரராக, ரசிகர்களின் பெரிய ஈர்ப்பாளராகக் கருதப் பட்ட உலகின் இன்றைய மிகச்சிறந்த வேகப்பந்து வீச்சாளரான கேகிசோ ரபாடா முதுகு வலி காரணமாக தொடரிலிருந்து விலகியுள்ளார்.

3 மாத காலம் அவர் கிரிக்கெட்டில் பங்கேற்க முடியாது என்று தெரிகிறது. டில்லி டேர் டெவில்ஸ் அணி ரபாடாவை 4.2 கோடி ரூபாவுக்கு வாங்கியது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான சர்ச்சை கள் பல கொண்ட தொடரில் ஆஸி. வீரர் களை தன் வேகத்தாலும் ஸ்விங்கினாலும் படுத்தி எடுத்த ரபாடா, 23 விக்கெட்டு களுடன் தொடர் நாயகனாகத் தேர்வு செய் யப்பட்டார். 4ஆவது டெஸ்ட் போட்டியின் போது காயமடைந்ததற்கான அறிகுறி களைக் காட்டினார். 2ஆவது இன்னிங்ஸில் 8 ஓவர்களையே வீசினார்.

அதன் பிறகு ஸ்கேன் எடுத்தபோது காயத்தின் தீவிரம் தெரியவந்தது.

இதனையடுத்து 3 மாத காலம் அவரால் ஆட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது, கவுதம் கம்பீர் தலைமையிலான டில்லி டேர் டெவில்ஸின் திட்டங்களுக்கு இது ஒரு பின்னடைவே.



# சைக்கிள் பந்தயத்தில் ஆஸ்திரேலியா உலக சாதனை

பொதுநலவாய விளையாட்டு சைக்கிள் பந்தயத்தின் இறு திப்போட்டியில் ஆஸ்திரேலிய அணி உலக சாதனையுடன் தங்கப்பதக்கத்தைக் கைப் பற்றியது.

பொதுநலவாய விளையாட் டுப் போட்டியில் ஆண்கள் அணிகளுக்கான 4 கிலோ மீற்றர் தூர சைக்கிள் பந்த யத்தின் இறுதிப்போட்டி யில் ஆஸ்திரேலிய அணி 3 நிமிடம் 49.804 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து உலக சாதனையுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

இதற்கு முன்பு 2016ஆம் ஆண்டு ரியோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் இங் கிலாந்து அணி 3 நிமிடம் 50.265 வினாடியில் பந்தய தூரத்தைக் கடந்ததே உலக சாதனையாக இருந்தது.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் குறித்து அவர் 'காலைக்கதிர்' நாளிதழுக்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த அமைச்சரவைப் பத்திரம் குறித்து பிரதமருக்குக் கூறிவிட்டேன்.

இந்தக் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என ஜே.வி.பி. உட்படப் பலரும் வலியுறுத்துகின்றனர். ஆனால் யாரும் நடவடிக்கை எடுக்கின்றார்கள் இல்லை.

ஆகவே, நான் அமைச்சர் என்ற முறையில் இதற்கான பத்திரத்தைக் கொண்டு வரவுள்ளேன். புது வருடம் முடிந்ததும் – இம்மாத இறுதிக்கு முன்னர் – அமைச்சரவைப் பத்திரம் தயாராகிவிடும்.

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களை மன்னிப்பு வழங்கி, புனர்வாழ்வளித்து விடுவிக்கவும், குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைகளில் இருப்போரை பிணையில் விடுவிக்கவும் வசதி செய்யும்படி கோர இருக்கிறேன்.

இந்த அமைச்சரவைப் பத்திரம்வந்தால்தான் இவ்விடயத்தில் பலரின் உண்மை ரூபம் தெரியவரும் என நினைக்கிறேன்.

மஹிந்தராஜபக்ஷ பன்னீராயிரம் போராளிகளை மன்னித்து, புனர்வாழ்வளித்து விடுவித்தார். ஆகவே, இந்த அரசியல் கைதிகளையும் நாம் விடுவிக்கின்றமையை அவர் உட்பட யாரும் எதிர்க்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். – என்றார். (உ)

## தமிழகத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டசபை உறுப்பினருமான கருணாஸிடம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த தமிழக நடிகர் கருணாஸ் தமிழகத்திலுள்ள ஈழத்துப் பிள்ளைகளுக்கான கல்லூரி அமைப்பது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் ஊடகங்களுக்கு முதலமைச்சர் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:

தமிழக சட்டமன்ற உறுப்பினரான கருணாஸுடனான சந்திப்பின்போது அவரிடம் நான் சில கோரிக்கைகளை முன்வைத்திருந்தேன். இதன்படி இங்குள்ள பல்கலைக் கழகங்களுக்கும் தமிழகப் பல்கலைக்கழகங்களுக்கும்இடையில்கல்விச்செயற்பாடுகள் தொடர்பாகப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்துவது தொடர்பாகப் பரிசீலிக்குமாறு பேசியிருந் தேன்.

இதேபோன்று விவசாயம் தொடர்பான நவீன கற்றல் முறைகளும், நவீனதொழிநுட்ப விடயங்களும் எமது மாணவர்களுக்குத் தேவையாகவுள்ள நிலையில் அது தொடர்பான கற்றல்களை மேற்கொள்ளப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட வேண்டும் எனக் கோரியிருந்தேன் – என்றார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருணாஸ் தெரிவிக்கையில்,

தமிழகத்திலுள்ள ஈழ மக்களின் பிள்ளைகள் கற்பதற்கு என்று தனியான ஒரு கல்லூரி இல்லை. இந்நிலையில் அவர்கள் வேறு பள்ளிகளில் சேருவதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனால் அவர்கள் கற்பதற்கு என்று தனியான ஒரு கல்லூரியை அமைக்க நான் திட்டமிட்டுள்ளேன்.

அந்தக் கல்லூரிக் கட்டடத்திற்கு ஒட்டுமொத்ததமிழ்மக்களாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒருவர், பொதுநலவாதியான ஒருவர் என்ற அடிப்படையில் முதலமைச்சரை அடிக்கல்நாட்டுவதற்கு அழைத்துள்ளேன். அதற்கமைய முதலமைச்சரும் வருவதாகக் கூறியுள்ளார். நான் தமிழகம்திரும்பியபின்னர் முதலமைச்சரை தமிழகத்திற்கு அழைப்பதற்கான திகதியை அறிவிப்பேன்.

முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தமிழக மக்கள் ஆந்திராவில் தாக்கப்பட்ட போதும், தமிழக மக்கள் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக போராடிய போதும் மக்களுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் அறிக்கைகளை விடுத்தவர். அந்தவகையில் முதலமைச்சருடனான சந்திப்பின்போது தற்போது தமிழ்நாட்டிலுள்ள பிரச்சினையான காவிரி நீர்ப் பிரச்சினைக்கு உலகத் தமிழ் மக்கள் அனைவரும் அதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கோரியிருந்தேன். அதற்கு முதலமைச்சர் தாம் அந்த விடயத்தைத் தொடர்ந்து கவனித்து வருவதாகவும் கூறியுள்ளார்-என்றார். (ஐ-7)

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கூட்டு எதிரணியால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கூட்டமைப்பினர் ரணிலுக்கு ஆதரவு வழங்குவதாக இருந்தால் நிபந்தனைகளை விதித்து எழுத்து மூல உறுதிமொழியைப் பெறவேண்டுமென முதலமைச்சர் ஏற்கனவே தெரிவித்திருந்தார். கூட்டமைப்பினரும் எழுத்து மூலக் கோரிக்கைகளைப் பிரதமரிடம் முன்வைத்து அதற்கான உறுதிமொழியையும் பெற்றுக்கொண்டனர்.

இது தொடர்பில் ஊடகவியலாளர் நேற்று முதலமைச்சரிடம் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:

பிரதமருடனான சந்திப்பின்போது எழுத்து மூலமான கோரிக்கைகளை கூட்டமைப்பினர் முன் வைத்தார்களோ தெரியவில்லை. அதேபோன்று கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்குப் பிரதமரும் எழுத்து மூலமான உத்தரவாதப் பதில்களை வழங்கியிருந்தாரோ தெரியவில்லை. ஆனால் அவ்வாறு விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தினால் எல்லோரும் சந்தோசம் அடைவோம்.

ஆனால் அவை அரசியலில் நடைமுறைக்கு எவ்வாறு எப்படி வருமென்று தெரியாது. பிரதமர் ஏற்றுக் கொண்டது போன்று நடவடிக்கைகளை எடுப்பாரென்று நம்புகிறேன். ஆகவே பொறுத்திருந்து பார்ப்போம் – என்றார். (ஐ-7)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிந்திய நடிகருமான கருணாஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் 413 ஆவது நாளாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த நடிகர் கருணாஸ் நேற்று நண்பகல் கிளிநொச்சிக்குச் சென்றார். அவருடன் சட்டத்தரணி க.சுகாஷும் சென்றிருந்தார்.

கிளிநொச்சி நகரில் 413 ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை நடிகர் கருணாஸ் சந்தித்தார். உறவுகளின் நிலைமைகள் தொடர்பில் அவர் கேட்டறிந்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது பிள்ளைகளின் விடயத்தில் உரிய தீர்வு கிடைக்க தமிழக சட்டமன்றத்தில் கவனவீர்ப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்து தமக்காகக் குரல் கொடுக்குமாறு கருணாஸிடம் வலியுறுத்தினர்.

இந்தச் சந்திப்பையடுத்து செய்தியாளர்களிடம் கருணாஸ் தெரிவித்தவை வருமாறு:

இன்று பல குடும்பங்கள் இவ்வாறு தமது பிள்ளைகளைக் காணாது போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் நிலையை நான் இன்று நேரில் அவதானித்தேன்.

இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் சட்டமன்ற அமர்வில் முதலமைச்சர் ஊடாகக் கவனவீர்ப்புப் பிரேரணை ஒன்றை முன்வைக்க உள்ளேன். வெறுமனே இவர்களைப் பார்த்துவிட்டுச் செல்வதில் எவ்வித பயனும் இல்லை.

அவ்வாறு பிரேரணையை முன்வைத்த பின்னர் ஜனாதிபதிக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயம் தொடர்பில் தெரிவிக்க உள்ளோம்.

ஜெனீவாவுக்கு இம்முறை செல்லஎனக்குவிசாமறுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் சட்டமன்றத்தீர்மானத்தைஎடுத்துஅடுத்து வரும் ஜெனீவா அமர்வில் நான் கலந்து கொண்டு, இலங்கை மக்களின் பிரச்சினைகள் தொடர்பில்கட்டாயம்உரையாற்றுவேன் – என்றார். (ஐ)

## புலனாய்வுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்குகளிலும் முக்கிய திருப்புமுனை ஏற்பட்டிருப்பதாகப் பொலிஸாரை மேற்கோள் காட்டி செய்தி நிறுவனங்கள் நேற்றுத் தகவல் வெளியிட்டன.

கீத் நொயார் மீதான தாக்குதல் தொடர்பிலேயே ஜெனரல் அமால் கருணாசேகர கைது செய்யப்பட்டுள்ளார். எனினும், 'த சண்டே லீடர்' பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்டமை உட்பட பல சம்பவங்கள் தொடர்பில் அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார் என்றும் அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பல்வேறு உயர்மட்டக் கொலைகள் மற்றும் தாக்குதல்களில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தது என்பதும் –

அந்த விடயங்களைச் சட்டரீதியாக மூடி மறைப்பதற்கு உயர்மட்டப் பொலிஸ் அதிகாரிகளும், சட்ட மருத்துவ அதிகாரிகளும் ஒத்துழைத்து வந்தனர் என்பதும் –

இப்போது விசாரணைகளில் அம்பலமாகி வருகின்றன என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அச்சமயம் இராணுவப் புலனாய்வுத்தலைவராக இருந்த அதிகாரி கைது செய்யப்பட்டமையை அடுத்து, அந்நேரத்தில் இடம்பெற்ற பல்வேறு அட்டூழியங்கள் குறித்து திடுக்கிடும் தகவல்கள் மேலும் அம்பலமாவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் கூறப்பட்டது. (உ)

(மற்றொரு செய்தி 11ஆம் பக்கத்தில்)

## 108 தேங்காய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் நடத்தினர்.

நாடு முழுவதுமுள்ள பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி தொடக்கம் தொடர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக ஊழியர்களும் தமது பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தைப் பல்வேறு வடிவங்களில் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் யாழ். பல்கலைக்கழக வளாகப் பிரதான வாசலில் கற்பூரம் ஏற்றி 108 தேங்காய்கள் உடைத்து அவர்கள் போராட்டம் நடத்தனர். (ஐ-7)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் கல்வி அமைச்சில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கான கடிதங்கள் தற்பொழுது வடக்குத் தொண்டர் ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்தக் கடிதங்கள் கிடைத்ததும் நேர்முகப் பரீட்சைக்கு வரும்தொண்டர்ஆசிரியர்கள்தாங்கள் பாடசாலைகளில் சேவை செய்ததற்கான உறுதிப்படுத்திய அத்தாட்சிக் கடிதம் அல்லது சத்தியக் கடதாசி (கிராம சேவகர் ஊடாக அல்லது சமாதான நீதிவான் ஊடாக) கட்டாயம் எடுத்து வரவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்கள் 494 பேருக்கு பாடசாலைகளில் சேவை செய்ததற்கான பாடசாலை சம்பளத் திரட்டு புத்தகத்தில் அவர்களின் பதிவு இன்மை காரணமாக நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு வந்தது.

இதற்கு மாற்று நடவடிக்கையாகத் தொண்டர் ஆசிரியர்கள் தாங்கள் பாடசாலைகளில் சேவை செய்ததற்கான உறுதிப்படுத்திய அத்தாட்சிக் கடிதத்தை அல்லது சத்தியக் கடதாசியை நேர்முகப் பரீட்சைக்கு கொண்டு வரவேண்டும்.

இதனை உறுதிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் இவர்களுக்கான நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எனவே நேர்முகப் பரீட்சைக்கு வரும் தொண்டர் ஆசிரியர்கள் அத்தாட்சிக் கடிதத்தைக் கட்டாயம் கொண்டு வரவேண்டும். வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படமாட்டாது.

இந்த இறுதிச் சந்தர்ப்பத்தை பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இனிமேல் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படமாட்டாது. தற்போது மொத்தமாக 676 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களில் முதல் கட்டமாக 182தொண்டர்ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு அண்மையில் அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. மிகுதியான 494 தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்குவதற்கே தற்பொழுது மேற்படி நேர்முக பரீட்சை நடைபெற உள்ளது – என்றார். (ஐ)

## சு.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகரிடம் கையளித்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 6 அமைச்சர்களுக்கு எதிராகவே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் எஸ்.பி.திஸநாயக்க, சுசில் பிரேமஜயந்த, தயாசிறி ஜயசேகர, அநுரபிரியதர்சனயாப்பா, சந்திம வீரக்கொடி மற்றும் ஜோன் செனவிரத்ன ஆகியோர் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதேவேளை, பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால உள்ளிட்ட மேலும் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளைமறுதினம்திங்கட்கிழமை கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பிரேரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில்லாப் பிரேரணை மீளப் பெறப்படும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இந்தத் தகவலை அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் எஸ்.பி.திஸநாயக்க, சுசில் பிரேமஜயந்த, தயாசிறி ஜயசேகர, அநுர பிரிய தர்சன யாப்பா, சந்திம வீரக்கொடி மற்றும் ஜோன் செனவிரத்ன ஆகியோர் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அவர்கள் 6 பேருக்கும் எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் நேற்று மாலை கையளித்தனர்.

இந்த நிலையில் அந்தப் பிரேரணை மீளப்பெறப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் உறுதியளித்துள்ளார். (ஐ)

## ஈ.பி.டி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனான முதலாவது அமர்வு நேற்றுக் காலை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தெரிவின்போது , தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் பிலிப் பற்றிக் றொஷானைப் பிரேரித்தனர். ஈ.பி.டி.பியினர் நல்லதம்பி சசிக்குமாரை பிரேரித்தனர்.

வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரேரித்த பிலிப்பற்றிக் றொஷான் 7 வாக்குகளைப் பெற்றுத் தலைவராகத் தெரிவானார். ஈ.பி.டி.பி. பிரேரித்த நல்லதம்பி சசிக்குமார் 6 வாக்குகளைப் பெற்றுக்கொண்டார்.

நெடுந்தீவுப் பிரதேச சபை 13 உறுப்பினர்களைக் கொண்ட சபையாகும். அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 4 உறுப்பினர்களையும், ஈ.பி.டி.பி. 6 உறுப்பினர்களையும் சுயேச்சைக் குழு 2 உறுப்பினர்களையும், ஐக்கிய தேசியக் கட்சி ஒரு உறுப்பினரையும்பெற்றுக்கொண்டது.

அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுவின் ஆதரவுடன் ஆட்சி அமைத்தது. (ஐ-7)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புகோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாடாளுமன்றத்தில் பிரதமருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று இதற்கு நான் வகை கூற வேண்டியவன் என்றும் இன்னும் சிலர் நான் இதற்கு ஆதரவளிப்பதாகவும் இன்னும் சிலர் நான் இதற்கு ஆதரவளிக்கவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

### உள்ளூராட்சித் தேர்தல்

கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தொகுதி மட்டப் பெறுபேறுகள் வெளியானதைத் தொடர்ந்து, தேர்தல் ஆணையாளர் உத்தியோகபூர்வப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு முன்னர், சில அரச சார்பற்ற தனியார் ஊடக நிறுவனங்கள் பெறுபேறுகளை வெளியிட்டன.

எனினும் உண்மையாக தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட பெறுபேறுகள் தொடர்பில் குறிப்பிடுவதாயின் இந்தப் பெறுபேறுகள் தொடர்பில் யார் எந்த பகுப்பாய்வுகளை முன்வைத்த போதும் தேர்தலில் போட்டியிட்ட எந்தவொரு கட்சிக்கும் 40 வீத வாக்குகளைப்பெற்றுக்கொள்ள முடியவில்லை.

40 வீத வாக்குகளைப் பெற்றுக் கொள்ள எந்தவொரு அரசியல் கட்சிக்கும் முடியாமல் போன உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் பெறுபேறுகளை தேசிய தேர்தல் பெறுபேறுகளுடன் ஒப்பிட்டு முன்வைக்கப்பட்ட அரசியல் ஆய்வுகள் மற்றும் விமர்சனங்கள் அதன் புள்ளிவிவர ரீதியான உண்மைத் தன்மையை வெளிப்படுத்தவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற வகையில் நாம் கை, வெற்றிலை, குதிரை மற்றும் சேவல் ஆகிய 04 சின்னங்களில் போட்டியிட்டோம். அந்த 04 சின்னங்களுக்கும் சுமார் 15 வீத வாக்குகள் கிடைக்கப்பெற்றன. சிலர் இந்த தேர்தலின் பெறுபேறுகளை விளக்குகின்ற முறையைப் பார்க்கின்றபோது எமக்குத் தேவையாயின் அதனை நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றுடன் ஒப்பிட முடியும்.

கிடைக்கப்பெற்றுள்ள வாக்குகள் நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றுக்கானதாயின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 30 ஆசனங்கள் கிடைத்திருக்கும். அதேபோன்று தாமரை மொட்டுக் கட்சிக்கு 102 ஆசனங்கள் கிடைத்திருக்கும்.

இதன் மூலம் விளங்க வருவது என்னவென்றால் இந்த வாக்குகள் பொதுத் தேர்தல் ஒன்றில் கிடைத்திருக்குமாயின் எந்த வொரு கட்சிக்கும் தனியாக ஆட்சியமைக்கக் கூடிய வாய்ப்பு கிடைக்காது.

மறுபுறத்தில் அரசுக்கெதிரான கட்சி பாரிய வெற்றியை அடைந்துள்ளதாக அவர்கள் கூறினர். அந்த அரசியல் நிலைமையை கருத்திற்கொண்டு அவர்களுக்குத் தற்போது அரசை அமைக்க முடியும் என்று கூறிவந்தனர்.

அதேபோன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அரசுடன் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பிரிவினர் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னர் அரசிலிருந்து விலக வேண்டும் என்ற கருத்தை முன்வைத்திருந்தனர்.

### தேர்தல் முடியும் வரை நல்லாட்சி தொடர முடிவு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றக் குழுவில் 41 பேர் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இந்தப் பெறுபேறுகள் வெளியானதைத் தொடர்ந்து அரசிலிருந்து வெளியேறவேண்டுமெனக் கூறிவந்தவர்களது எண்ணிக்கை அதிகரித்தது.

அதேபோன்று மறு புறத்தில் கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் விலக வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கின்ற போது கட்சியின் மத்திய செயற் குழுவிலும் நாடாளுமன்றக் குழுவிலும் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெளியேற வேண்டிய தேவை இல்லை எனத் தீர்மானிக்கப்பட் டது.

ஏனென்றால் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி ஆகின்ற போது தேர்தலுக்கான காலம் நெருங்கிவிட்டது.

எனவே தேர்தலுக்குப் பின்னர் தீர்மானமொன்றை மேற்கொள்வதாக வும் அது வரை அரசில் இருந்து விலக வேண்டிய தேவையில்லை என்றும் உடன்பாடு எட்டப்பட்டது.

அந்த வகையில் தேர்தல் முடியும் வரை இணைந்திருப்பதற்கான முடிவு பெறப்பட்டது. தேர்தல் பெறுபேறுகளின் பின்னர் அரசிலிருந்து விலக வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தவர்களின் அந்தக் கோரிக்கை வலுப்பெற்றது.

### ரணிலுக்குப் பிரச்சினை

அதேபோன்று தேர்தல் பெறுபேறுகளுடன் பிரதமருக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பிரச்சினை உருவானது. இந்தத் தேர்தல் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த வாக்குகள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரச்சினை ஒன்று உருவானது.

அப்போது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக தாமரை மொட்டுச் சின்னத்தின் கீழ் இருக்கும் நாடாளுமன்ற அணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள அரசில் இருந்து விலக வேண்டுமென்று கூறி வந்த அணியும் அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரதமருக்கு எதிரான அணியும் இணைந்து தான் இந்த நம்பிக் கையில்லாப் பிரேரணை தொடர்பில் உடன்பாட்டுக்கு வந்தனர். நாடாளுமன்றத்தில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தியபோதும் எதிர்க் கட்சியில் இருக்கின்ற உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாக என்னைச் சந்திப்ப தற்கு எழுத்து மூலம் கோரி மூன்று முறை என்னைச் சந்தித்தனர். அந்தச் சந்திப்புக்களில் பிரதமர் ஒருவரைத் தெரிவு செய் வதற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியுமென்று கூறி அதற்கு இடமளிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். அப்போது நான் அவர்களிடம் அரசமைப்பின்படி சாதாரணமாக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கக் கூடிய ஒரு பிரிவினர் இருப்பார்களாயின் அரசமைப்பு ரீதியாக அதனை நிரூபிக்க வேண்டுமென்று கூறினேன்.

அவ்வாறு நிரூபிக்கும் பட்சத்தில் அது தொடர்பாகத் தீர்மானத்திற்கு வரவேண்டியது ஜனாதிபதியுடைய பொறுப்பாகும். அவ்வாறின்றி எனக்கு அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையையும் எடுக்க முடியாதென்பதையும் நான் அவர்களிடம் கூறினேன்.

### நம்பிக்கையில்லா பிரேரணை வந்தது

அந்த வகையில் அவ்வாறு நிரூபிக்க முடியுமென்று இந்த மூன்று தரப்பில் இருந்தவர்களும் கலந்துரையாடி நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குச் சென்றனர். அண்மையில் வாக்களிப்பு இடம்பெற்றதைத் தொடர்ந்து நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு என்ன நடந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

இந்த நிலைமையில் ஜனாதிபதி என்ற வகையில் எனது பொறுப்பும் கடமையும் என்னவென்றால் நாடாளுமன்றத்தில் என்ன வகையான அரசியல் பிரச்சினைகள் இருந்த போதும் நான் நாட்டுக்கு வகை சொல்ல வேண்டும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அரசைப் பலப்படுத்த வேண்டியது எனது கடமையாகும்.

அவ்வாறு பலப்படுத்துகின்ற போது எந்தவிதமான பேதங்களும் இன்றி நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்பை நான் பெற்றுக்கொள்வேன். அரசு பலவீனப்படுவதற்கு இடமளிக்க முடியாது. அதேபோன்று நாடாளுமன்றத்தில் உள்ள உறுப்பினர் பதவிகளின் கட்டமைப்புக்கு ஏற்ப நாம் ஒன்றுபடுவதன் மூலமேயன்றி தனியாக அரசை அமைக்க முடியாதென்பதை எடுத்துக் கூறியிருக்கிறேன்.

2015ஆம் ஆண்டு முதல் இந்த நிலைமை இருந்து வருகின்றது. அதிக நாடாளுமன்ற ஆசனங்களைக் கொண்டிருக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கு 106 ஆசனங்கள் உள்ளன. அந்த 106 ஆசனங்களுடன் அரசை முன்னெடுக்க முடியாது. தனிக்கட்சியொன்றுக்கு அரசு அமைக்க முடியாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நான் கேட்டுக்கொள்வது அரசைப் பலப் படுத்துவதற்காக எந்தவொரு உறுப்பினரும் அரசுடன் இணைந்துகொள்ள முடியும் என்பதாகும். அவ்வாறு வருகின் றவர்களுடன் அரசைப் பலமாக முன்னெடுத்துச் செல்லவுள்ளேன்.

நாட்டில் தற்போது இருக்கின்ற சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிப்பது மிகவும் அவசியமாகும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் காரணமாக பெரும்பாலான அமைச்சுக்களின் பணிகள் முன்னெடுக்கப்படவில்லை. தேர்தல் முடிவடைந்த பின்னரும் கண்டியில் ஏற்பட்ட நிகழ்வுகள் மற்றும் பிரதமருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை ஆகியவற்றுடன் நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற நிலைமை ஒன்று உருவானது.

எனவே இந்த நிலைமையில் நாட்டில் இடம்பெற வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவு படுத்த வேண்டியது அவசியமாகும். தற்போது இருக்கின்ற அரசியல் சூழ்நிலையிலும் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டக் குழுக்கூட்டங்களை நடத்தி அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளமை தொடர்பாக நான் மகிழ்ச்சியடைகின்றேன். தற்போது அந்த அமைதியற்ற சூழ்நிலை நிறைவடைந்து விட்டது. எனவே அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும்.

### உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தை உடனே திருத்துவது அவசியம்

மற்றுமொரு விடயத்தையும் நான் குறிப்பிட வேண்டும். கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலைத் தொடர்ந்து ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்களுக்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தலைவர்களைத் தெரிவு செய்து வருகின்றார்கள். அந்த நடவடிக்கைகள் பெரும்பாலும் இன்றுடன் நிறைவுக்கு வரும். இந்தத் தேர்தல் முறைமையில் உள்ள அரசியல் ரீதியான குறைபாடு காரணமாகச் சில இடங்களில் அதிகாரத்திற்கு வந்திருப்பவர்கள் மக்கள் தெரிவு செய்தவர்கள் அல்லர். இந்த நிலைமை மக்கள் கருத் துக்கு சவாலானதாகும். மக்கள் கருத்து அங்கீகரிக்கப்படாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது நல்லதல்ல.

எனவே இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டத்தை உடனடியாக திருத்துவது அவசியமாகும். மேலும் எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட பெரும் எண்ணிக்கையான உறுப்பினர்கள் எமக்கு தாக்கு பிடிக்கக்கூடிய எண்ணிக்கையல்ல.

அடுத்தது இதன் மூலம் உருவாகின்ற புதிய அரசியல் கலாசாரம் சிறந்ததோர் அரசியல் கலாசாரமாக தெரியவில்லை. தெரிவு செய்யப்பட்டிருக்கும் தலைவர் தெரிவுகளில் எவ்வளவு மோசடிகள் இடம்பெறுகின்றன என்பதை எமக்கு அனுமானிக்க முடியாது. எனவே இந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்தச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் எட்டாயிரத்தை நாலாயிரமாக குறைக்கவேண்டுமென்று நான் அமைச்சரவைக்கு முன்மொழிகின்றேன். அடுத்த தேர்தலில் அதற்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரிக்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.

### வரி தொடர்பில் பொய் பிரசாரம்

இங்கு தெளிவுபடுத்தப்பட வேண்டிய மற்றுமொரு முக்கியமான விடயம் புதிய வரி முறைமை தொடர்பாக அண்மைக்காலமாக சமூக ஊடகங்களில் பேசப்பட்டு வருகின்றது. அரச ஊழியர்களின் சம்பளத்தில் குறிப்பிட்டதொரு தொகையை வரியாகச் செலுத்த வேண்டுமென்றும் ஓய்வூதியம் பெறுபவர்களிடமிருந்து குறிப்பிட்ட தொகை அறவிடப்படவுள்ளதென்றும் போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

என்றாலும் அமைச்சின் செயலாளர்கள் முதல் கடைநிலை ஊழியர் வரை சம்பளம் பெறும் ஊழியர்களின் வைப்புத் தொகைகளிலிருந்து வரி அறவிடப்பட மாட்டாது என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். இந்த வரி முறைமையில் ஒருவருடைய வங்கிக் கணக்கில் மாதாந்த வட்டியாக ரூபா 125,000 அல்லது அதற்கு மேல் வட்டியாக ஈட்டப்படுமானால் மட்டுமே வரி அறவிடப்படும்.

மாதம் ஒன்றுக்கு ரூபா 125,000 வட்டி கிடைக்க வேண்டுமென்றால் ஒருவருடைய கணக்கில் ரூபா 2 கோடி இருக்க வேண்டும். இவ்வாறு தான் வரி முறைமை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அரச ஊழியர்களுக்கு அவர்களது கணக்கில் 2 கோடி ரூபா சேமிக்க முடியாது. அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து அரச ஊழியர்களினதும் அனைத்து கொடுப்பனவுகளையும் சேர்த்தும் இத்தகைய நிலைமை ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை.

அதேபோன்று கண்டியில் இடம்பெற்ற நிகழ்வுகளின்போது அரச மற்றும் தனியார்துறை ஊடகங்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன். மோதல் நிலைமையைத் தவிர்த்து நாட்டில் அமைதியான சூழலை ஏற்படுத்துவதற்கு அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களும் பெரும் பங்களிப்பை வழங்கின.

பிரச்சினைகள் ஏற்படுகின்ற வகையில் செய்திகளை வெளியிடாது அனைத்து ஊடக நிறுவனங்களும் செயற்பட்டன. இந்த நிலைமை முற்றி இருக்குமானால் நாட்டில் அதனை கட்டுப்படுத்தக்கூடிய சூழ்நிலை இருந்திருக்காது.

குறித்த சில நாட்களில் அவசர காலச் சட்டத்தையும் ஊரடங்கு சட்டத்தையும் பிறப்பித்து சமூக ஊடகங்களை தற்காலிகமாக நிறுத்தியமை தொடர்பாக அந்தச் சந்தர்ப்பத் தில் சில விமர்சனங்கள் முன் வைக்கப்பட்ட போதும் பொதுவாக மக்கள் அதனை அங்கீகரித்தார்கள் என்றே நான் நினைக்கின்றேன். அந்தக் காலப் பகுதியில் பாடசாலை பிள்ளைகளின் பெற்றோர் என்னிடம் முடியுமானால் இந்த சமூக ஊடகங்களைத் தொடர்ந்தும் தடை செய்தால் எமது பிள்ளைகளின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்குமென்று என்னிடம் தெரிவித்தார்கள். அது சமூகத்திலிருந்து வந்த கருத்துக்கள் ஆனால் நான் அவ்வாறு செய்யப்போவதில்லை-என்றார்.

(ஐ)










இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.